Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்








மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 03 (08.12.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 68


# தமிழருக்கு உரிமைகள் கிடைப்பதற்கு புலிகள் பலத்துடன் இருப்பதே காரணம்

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வேயில் இன்று அதிகாலை பேச்சு

(ஒஸ்லோ)

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தந்தை செல்வ நாயகம் தமிழர்களுக்கு சுயாட்சியைக் கேட்டபோது சிங்கள அரசாங்கம் அதனைத் தரவில்லை. ஆனால், இன்று நாம் மிகப் பலமான நிலையில் நிற்பதால் அரசாங்கமே சமஷ்டி ஆட்சியைத் தர முன்வருகிறது என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வேயில் தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)



## தேவாலயத்தினுள் பெண் மீது கடற்படை வல்லுறவு முயற்சி

### நெடுந்தீவில் பட்டப்பகலில் அட்டகாசம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் கடற்படைச்சிப்பாய் ஒருவர் தேவாலயத்தில் பிரார்த்தனையில் இருந்த பெண் மீது வன்புணர்வுக்கு முயற்சித்துள்ளார். நெடுந்தீவு மாவலித்துறைமுகத்தருகேயுள்ள சவேரியார் தேவாலயத்திலேயே மேற்படி சம்பவம் நேற்று மாலை 3 மணிக்கு நடைபெற்றுள்ளது.

மேற்படி பெண் பிரார்த்தனையில் தனியே தேவாலயத்திற்குள் இருந்த சமயம், தேவாலயத்திற்குள் சென்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இராணுவத் தளபதியை இடமாற்ற அரசு நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை யாழ்.மாவட்டத்தில் இருந்து இடமாற்றம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களின்போது புலிகள் தரப்பில் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் கடும்போக்கான செயற்பாடுகள் குறித்து கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உயர் பாதுகாப்பு வலயம் குறித்தும் ஏனைய விடயங்கள் குறித்தும் சரத் பொன்சேகா விட்டுக்கொடுப்பற்ற போக்கைக் கடைப்பிடித்து வருகிறார் என விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளால் கடும் ஆட்சேபனை ஒஸ்லோவில் வைத்து அரச தரப்புக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

இவரின் இவ்வாறான நடவடிக்கைகளைத் தொடர்ந்தே, யாழ். மாவட்டத்தில் இருந்து இவரை இடமாற்றம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## சமஷ்டி குறித்து இந்தியா இருவேறு கருத்துக்கள்!

(புதுடெல்கி)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமஷ்டிக்கட்டமைப்பு பற்றிய இணக்கப்பாட்டினை வரவேற்பதில், இந்திய அதிகாரிகள் இரு வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது

குறிப்பிட்ட அதிகாரிகள் சிலர் இந்த முயற்சிகளின் பேரில் நம்பிக்கை கொண்டிருந்த அதேவேளை, சில அதிகாரிகள்- நோர்வேயின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய தீர்வினை விட இந்தியாவின் திட்டம் சிறந்தது

### முன்னாள் தூதுவர் டிக்ஷிற் கருத்து



(புதுடெல்கி)

தற்போது ஒஸ்லோவில் இணக்கம் காணப்பட்ட தீர்வைவிட, சிறந்த தீர்வை 1987 இல் இந்தியா முன் வைத்தது. அப்போது அதை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சந்தேகத்துடன் பார்த்தனர். அதனால், அது தோல்வியுற்றது என இந்தியாவின் முன்னாள் தூதுவர் டிக்ஷிற் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் சமஷ்டித் தீர்வு குறித்து இணக்கம் கண்டமை பற்றி பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவித்த டிக்ஷிற், ஊடகங்களில் வரும் தகவல்கள் சரியானவையாயின் இனப்பிரச்சினைத் தீர்வில் இது முன்னேற்றகரமான அம்சம். தற்போதைய சமாதான முயற்சியில் இந்தியா தலையிட்டால் முன்னர் போன்று குற்றச்சாட்டுக்கள் எழலாம் என்பதால் இதில் தலையிட இந்தியா மறுக்கிறது எனவும் டிக்ஷிற் மேலும் தெரிவித்தார்.

## அரசு – புலிகள் இணக்கம் பற்றி ஆராய இந்திய வெளியுறவுச் செயலர் வருகை



(புதுடெல்கி)

இந்திய வெளியுறவுச் செயலாளர் கன்வால் சிபால நேற்று நள்ளிரவு சென்னையில் இருந்து கொழும்பு வந்துள்ளார். வெளியுறவுச் செயலாளர் இலங்கையில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கும் வேளையில் -ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, சரத் அமுனுகம ஆகியோர் இந்தியாவிற்குச் சென்று, தற்போதைய சமாதானச் செயற்பாடுகளில் இந்தியாவிற்குப் பாதகமான விடயங்கள் உள்ளதாக, அவற்றை இந்தியாவிற்கு எடுத்துச் சொல்வதற்காகச் சென்றிருந்தமை தெரிந்ததே.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்றமையால்தான், புதிய வெளியுறவுச் செயலாளர் இலங்கைக்கு வந்துள்ளதாகவும், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ள சமஷ்டி முறை பற்றிய இந்தியாவின் கருத்தினை கன்வால் சிபால் நேரில் அறிவார் எனவும் நம்பப்படுகிறது.

சிபால் - அமெரிக்கா, துருக்கி, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தூதுவராகவும் முன்னர் பணியாற்றியிருந்தார். தற்போதைய பதவியை கடந்த ஜூலை மாதம் அவர் பொறுப்பேற்றிருந்தார்.

### விண்ணாணம் விநாசியர்



கடவுள் சன்னிதியிலேயே கடற்படை இப்பிடி நடக்குதென்டால்... ஆண்டவா...?

### உள்ளே

எழுதுநர் சேவை

போட்டிப் பரீட்சை

நுண்ணறிவு வினாத்தாள்


SERENDIB

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

விமான சேவை

J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,

(சி-148) CMB 505632 - 390128 - 0777-517019

# தகவல் தரும் ஈராக் விஞ்ஞானிகளுக்கு தஞ்சம் வழங்க அமெரிக்கா தயாராம்!


ஆயுதப்பரிசோதகர்கள் இந்தப் பழைய கொன்ரெய்னரையும் விட்டுவைக்கவில்லை.

(பக்தாத்)

ஈராக்கிய விஞ்ஞானிகள் எவராவது அந்நாட்டின் பேரழிவு தரும் ஆயுத உற்பத்தித்திட்டம் பற்றிய ரகசியத் தகவல்களை தந்துதவினால் அவர்களுக்கு அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் வழங்க வழிசெய்யுமாறு, ஐ.நா ஆயுதப்பரிசோதனைக் குழுவை, அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்து தெரிவித்த, ஐ.நா ஆயுதக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ், நாம் ஆட்களைக் கடத்த வரவில்லை எனினும் தகவல் தருபவர்களை பாதுகாக்க முன்வருவோம் என்றார்.

## கென்யாவில் ஏவுகணைகள் மீட்பு



கடந்த வாரம் கென்யாவில் இஸ்ரேலிய பயணிகள் விமானம் மீது தாக்குதல் நடத்தப் பயன்பட்ட இரண்டு ஏவுகணைகளை கென்ய பொலிசார் மீட்டுள்ளனர். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் ஒரு சோளத்தோட்டப்பகுதியில் இவை மீட்கப்பட்டன. இவற்றில் ஒரு ஏவுகணை பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்டது.

கடந்த வாரம், தலைநகர் மொம்பஸாவிலிருந்து புறப்பட்ட இஸ்ரேல் பயணிகள் விமானம் ஏவுகணைத் தாக்குதலில் மயிரிழையில் தப்பியமை தெரிந்ததே. மீட்கப்பட்ட இந்த ஏவுகணைகள், ரஷ்யத்தயாரிப்பான ஸ்ரெலா-2 என அடையாளம் காணப்பட்டுள்ளது.



இந்திய கடற்படை வாரத்தையொட்டி நேற்று அரேபியக் கடலில் நடைபெற்ற கடற்படைத் தாக்குதல் கண்காட்சியின்போது, கடற்படைக் கப்பலொன்று ரோர்ப்பிடோ ஏவுகணையைச் செலுத்துவதையும், உள்ளே இந்திய கடற்படையின் அதிரடிப்படையினரையும் காணலாம்.

உலகவலம்


நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
சிறப்புத் தள்ளுபடி!
05.12.2002 முதல் 31.12.2002 வரை மட்டுமே
தரமோ உயர்வு! விலையோ மலிவு!!
லைட்டன் புடைவை நிலையம்
பஸ் நிலையம் முன்பாக
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2222381
(சி-285)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த
நேருக்கு நேர்
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-287)

ராஜா யாழ்ப்பாணம்.

நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-262)

சிறுவிளம்பரம்
கண்டெடுக்கப்பட்டது
சின்னையா சிவகுமார் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.743553209V) கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
யோசப் ஞானப்பிரகாசம் (மோகன்)
யாழ்.மாநகர சபை,
140, அரசடி வீதி,
கட்டுடை, மானிப்பாய்.
(061)

யாழ்.நகரின் மத்தியில்
சகல வசதிகளுடன் கூடிய தங்குமிடத்திற்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்
"LOSAN INN"
175, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(வேம்படிச் சந்திக்கு அண்மையில்)
(சி-284)

# STUDY IN INDIA

## Admission Notice - Year 2003

### Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### MUTHAYAMMAL College of Arts& Science affiliated to PERIYAR UNIVERSITY (Salem)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. Biocemistry | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc. Biotechnology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Physics | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Microbiology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Com. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Cs | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.B.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.C.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY (Channai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

### நீங்கள் O/L முடித்துவிட்டீர்களா???

இந்தியாவில் Diploma (3வருடம்) பயிற்சி நெறியில் சேர்ந்து, பின் ANNA UNIVERSITY (மேலும் 2 வருடம்) பயின்று பட்டதாரியாக (Graduate/ Degree Holder) வாய்ப்பு.

3 Years Diploma in
- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS
- COMPUTER TECHNOLOGY
- ELECTRONICS & COMMUNICATION
- AUTOMOBILE
- INFORMATION TECHNOLOGY
- ELECTRONICS & INSTRUMENTATION*

MUTHAYAMMAL POLYTECHNIC
Rasipuram - 637 408. Namakkal Dt. T.N. India

◈ Separate Hostel for Boys & Girls and with all Meals ◈ All necessary VISA formalities will be handled by the College

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, 'Colombo Plaza', 50 Galle Road, Colombo-06.
Tel: 072-984297
074-512468

# கூடுதல் அதிகாரமுள்ள சமஷ்டியே இனப்பிரச்சினைக்குச் சிறந்த தீர்வு!

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பணிப்பாளர்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு-கிழக்குப் பகுதிக்கு, கூடுதல் அதிகாரங்களை வழங்கக்கூடியதான - சமஷ்டி முறையே சிறந்த தீர்வாக இருக்க முடியுமென கொழும்பிலுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் ரோஹான் எதிரிசிங்க கருத்துத் தெரிவித்துள்ளார்.

'நியூயோர்க் ரைம்ஸ்' இற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கும் போது -

யுத்தநிறுத்தம் அமுலாக்கப்பட்டு ஒன்பதே மாதங்கள் ஆகியுள்ள நிலையில் - அரசாங்கமும் விடுதலைப புலிகளும் ஓர் இணக்கத்திற்கு வந்திருப்பதானது - முக்கியமான முன்னேற்றமாகும். உண்மையிலேயே இந்த வளர்ச்சி எனக்கு வியப்பைத் தருகின்றது என்றார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போதுள்ள சூழ்நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கலைத்து அமைதி முயற்சிகளைக் குழப்பமாட்டார் என்றே நினைக்கிறேன். சர்வதேச அபிப்பிராயம் பற்றி அவர் கூடிய கவனம் செலுத்தவே செய்வார் என்றும் ரோஹான் எதிரிசிங்க மேலும் தெரிவித்தார்.

## கைத்தொழில் அபிவிருத்திச் சங்கக் கூட்டம

தென்மராட்சி ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு சாவகசசேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சின் பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார்.

இக்கூட்டத்தில் சங்கத்தின் அங்கத்தவர்களுககு அரச சார்பற்ற நிறுவனத்தினால், வழங்கப்படவுள்ள ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுக்கான படிவம் வழங்கப்படும் எனவும், மீளகுடியமர்வின் பின்னர் பிரதேசத்தில் சிறு கைத்தொழிலில் ஈடுபடுவோரும் கலந்துகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(34)

## 'சொப்பிங் பாக்' பாவனைக்கு விரைவில் தடை வரும்!

(கொழும்பு)

சொப்பிங் பைகளைத் தடை செய்ய விரைவில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சர் ருக்மன் சேனநாயக்க தெரிவித்தார்.

சொப்பிங் பைகளின் பாவனையால் சுற்றுச்சூழலுக்குப் பலத்த பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. இவற்றை மீள்பாவனைக்குப் பயன்படுத்துவதோ, அல்லது மீள் உற்பத்திக்கு பயன்படுத்துவதோ கடினமானது. மீள் உற்பத்திக்குப் பயன்படுத்துவதும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்தில் வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவன கிளையை யுனிசெப் நிறுவனத்தின் கிளிநொச்சி வதிவிடப் பிரதிநிதி பேனி புருன் திறந்து வைக்கும் காட்சி.

## மனித உரிமைகள் தினத்தன்று குடாநாட்டில் அமைதிப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மனிதநேய அமைப்புக்கள் ஒன்றிணைந்து, மனித உரிமைகள் தினமாகிய செவ்வாய்க் கிழமையன்று, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் அமைதிப் போராட்டம் ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளன.

காணாமற் போனோர் சம்பந்தமான விசாரணையைத் துரிதப்படுத்தி இது சம்பந்தமான உண்மை நிலையை வெளிப்படுத்தவும் உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி மக்களை மீளக்குடியமர்த்த அனுமதிக்கக்கோரியும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தவும் கோரியும், இவையனைத்தையும் நடைமுறைப்படுத்த உரிய தரப்புக்களுக்கு அழுத்தத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

மனித உரிமைகள் தினமாகிய செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு, யாழ். அரச சார்பற்ற நிறுவனத்தின் அலுவலகத்திலிருந்து பேரணியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்குச் சென்று மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

### வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் - சரத் சந்திரர் எழுதிய நாவலை மையமாகக் கொண்டு உருவாகிய "தேவதாஸ்" என்னும் தமிழ்த் திரைப்படம் இன்று ஞாயிறு காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## புன்னாலைக்கட்டுவன் வடக்கில் கண்ணிவெடி அச்சுறுத்தலால் பயிர்ச்செய்கைகள் பாதிப்பு!

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் ஏராளமான கண்ணிவெடிகள் புதைககப்பட்டிருப்பதனாலும், பாதுகாப்பு மண் அரண்கள் அகற்றப்படாமல் இருப்பதனாலும் - சுமார் 30 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வருடம் பெரும் போகச் செய்கை இடம்பெறவில்லை என இப்பகுதி விவசாய சம்மேளனச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஈவினை வடக்கு சுடுகாட்டிற்கு அண்மையிலுள்ள சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பிலும் கண்ணிவெடிகள் இருக்கும் என்ற அச்சத்தினால் கடந்த 5 வருடங்களாகப் பயிர்ச்செய்கை இடம்பெறாமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

## ஒஸ்லோ பேச்சுக்கு சென்ற அமைச்சர் பீரிஸ் நாடு திரும்பினார்

(கொழும்பு நிருபர்)

ஒஸ்லோவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழுவுடன் மூன்றாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நாடு திரும்பியுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் மிலிந்த மொறகொட தொடர்ந்தும் ஒஸ்லோவிலேயே தங்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது. இவர் நாடு திரும்பியதும் ஒஸ்லோ பேச்சுக்களில்- சமஷ்டித் தீர்வு காண்பது குறித்து இணக்கநிலை ஏற்பட்டது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கமளிப்பார் எனவும் தெரிய வருகின்றது. இதன் பின்னரே, ஜனாதிபதி - சமஷ்டி தீர்வு தொடர்பான தனது கருத்தை வெளியிடுவார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜினதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு இதுவரை ஆயிரத்து 479 முறைப்பாடுகள்

### 657 முறைப்பாடுகள் விசாரணையில்

(ஊரெழு)

இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்- இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இதுவரை 1479 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக யாழ்.மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு சர்வதேசப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மேற்படி முறைப்பாடுகளில் -ஆட்கடத்தல், சட்டவிரோத ஆயுதம் கொண்டு செல்லல், புதிதாக அரண் அமைத்தல், இராணுவத் தளபாடங்களை இடம் மாற்றல், சுதந்திரமான நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடு, சுயதொழிலுக்கு (மீன்பிடி) கட்டுப்பாடு போன்ற பல குற்றச்சாட்டுக்கள் இரு பகுதியினருக்கும் எதிராகக் கிடைத்துள்ளன. இவற்றுள் விசாரணைகள் முடிவுறாமல் 657 முறைப்பாடுகள் உள்ளன என்றும் தெரிவிககப்பட்டது.

(96)

## சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு!

### ரோக்கியோவில் பிரதமர் ரணில்

(கொழும்பு)

இலங்கைக்கு சமாதான ரீதியாக நோர்வேயும், நிதி ரீதியாக ஜபபானும் பெரிதும் உதவி வருவதாக ஜப்பானில் வைத்து இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை நீதிமன்றம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு விதித்த தண்டனை எந்த வகையிலும் சமாதானத்தினைக் குழப்பவில்லை எனவும், அதே வேளை, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

(01)

### உதைபந்தாட்டப் போட்டி

கம்பளை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் எவர்சைன் விளையாட்டுக் கழகத்துக்கும், யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று பி.ப 4 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

## புலிகள் நாளை ஜெனீவாவுக்கு சுவிஸ் அதிகாரபூர்வ அறிவிப்பு!

(ஜெனீவா)

சுவிற்ஸர்லாந்து நாட்டில் நடைமுறையில் இருக்கும் சமஷ்டி முறை குறித்து விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா ஆகியோர் நாளை ஜெனிவாவுக்கு செல்லவுள்ளதாக சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் முறியல் பேசட் கோஹுன் (Murial Beset Koken) தெரிவித்துள்ளார்.

சுவிஸ் நாடு இதற்கான அழைப்பினை விடுத்திருந்ததாகவும், இங்கு வரும் புலிகளின் குழுவினர் சுவிஸ் நடைமுறையிலுள்ள சமஷ்டியில் புவியியல், பிராந்திய அதிகாரப்பரவலாக்கல் குறித்து விரிவாக ஆராயவார்களென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜேர்மனிய வெளியுறவு அதிகாரி அடுத்தவாரம் கொழும்பு வருகிறார்!

(கொழும்பு)

ஜேர்மன் வெளியுறவுத் துறை அமைச்சின் அலுவலகத்தில் தென்னாசியத் திணைக்களத் தலைவராகக் கடமையாற்றும் டாக்டர் கிறிஸ்ரோப்ஜ் முல்லர் அடுத்த வாரமளவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அவர், இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதோடு; இலங்கையின் அரசியல் நிலைமை பற்றியும் அறிந்து கொள்வார்.

டாக்டர் முல்லர் - கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இவ்விஜயத்தின்போது, விடுதலைப் புலிகளின் அரசியல்துறை முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக ஜேர்மனிய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### 20 வருடங்களாகத் திருத்தப்படாதுள்ள வீதிகள்

இடைக்காட்டில் பல வீதிகள் 20 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காட்சி தருகின்றன. இவ்விடயம் தொடர்பாக அண்மையில் இப்பகுதிக்கு விஜயஞ் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறியும், இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (76)

## பாடசாலை ஆசிரிய நூலகர்களுக்கு ஜனவரியில் முதற்கட்டப் பயிற்சி

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நூலகப் பெருவளர்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நியமிக்கப்பட உள்ள ஆசிரிய நூலகர்களுக்கான முதற்கட்டப் பயிற்சி ஜனவரி மாத முற்பகுதியில் நடத்தப்பட உள்ளதாக உதவிக் கல்விப் பணிப்பாளாரும், மாகாண நூலக இணைப்பாளருமான ந.அனந்தராஜ் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களினால் சிபார்சு செய்து அனுப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபையும், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து இப்பயிற்சிகளை ஒழுங்கு செய்துள்ளன.

இதுவரை ஆசிரிய நூலகர்களுக்கான சுயவிபரப்படிவத்தினை அனுப்பி வைக்காத பாடசாலை அதிபர்கள் தமது வலயக் கல்விப் பணிப்பாளரினூடாக, மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அதனை அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் தொழிற்பயிற்சிகள்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி விரைவில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடைநிலைத் தொழில் நுட்பவியல் சார்ந்த பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்க முன்வந்துள்ளது.

அண்மையில், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமூகசேவைப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் மேற்படி உதவி வழங்குவது குறித்து உறுதியளித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உயர்கல்வி வாய்ப்புக் கிடைக்காத - பாடசாலைகளில் இருந்து வெளியேறிய இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புக்கள் இன்றியுள்ளதாகவும், இவர்களுக்கு தொழில் பயிற்சி வழங்கவேண்டும் என்றும் இதற்கு உதவி வழங்கும்படியும் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே இவ்வுதவித் திட்டம் குறித்து உறுதி வழங்கப்பட்டுள்ளது.(க)

# வலி.வடக்குப் பகுதியிலும் வாந்திபேதி அச்சுறுத்தல்!

## அவதானமாக இருக்க அறிவுறுத்து

(வுலி.வடக்கு)

வலி.வடக்குப் பகுதியில் வாந்திபேதி பரவும் அபாயம் இருப்பதால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக வலி.வடக்குப் பகுதியில் அநேகமானவர்களுகக்கு வாந்திபேதி நோய் பீடித்துள்ளமையும், இந்நோய் வேகமாகப் பரவிவருவதும் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அசுத்தமான நீராலும், பழுதடைந்த உணவுகளாலும் ஏற்படக்கூடிய இந்நோய் குறித்து பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும், சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி நவமலர் கனகரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (105)

# வனவளத் திணைக்களம் மீண்டும் யாழ்ப்பாணத்தில்!

(அரியாலை)

கடந்தகால யுத்தச் சூழ்நிலைகளினால் யாழ்.மாவட்டத்தில் இயங்காமல் இருந்த வனவளத் திணைக்களம் தற்போது இயங்கத் தொடங்கியுள்ளது.

மீள இயக்குவதற்கான நடவடிக்கைகளை வனவளத் திணைக்களத் தலைவர் சரத் பெர்ணாந்து மேற்கொண்டிருந்தார் - அத்துடன் வவுனியா மாவட்ட வனவள அதிகாரி எம்.எச்.எம்.பாரூக்கின் மேற்பார்வையின் கீழ், யாழ்.மாவட்ட வனவள அதிகாரியாக எம்.பிரபாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி வனவளத்துறை அதிகாரி பாரூக் கருத்துத் தெரிவிக்கையில் -

யாழ்.மாவட்டத்தில் உள்ள மரங்களைப் பதிவு செய்தல், வெட்டிய மரங்களை இடத்துக்கிடம் மாற்றுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கல், மரநடுகை விஸ்தரிப்பு மற்றும் மர நாற்றுக்களை விற்பனை செய்தல் போன்ற சகல வேலைகளையும் வனவளத் திணைக்களம் பொறுப்பேற்று நடாத்தவுள்ளது என்றும் - இந்த வனவள விஸ்தரிப்பு வன்னி மாவட்டத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வனவளத் திணைக்களத்தின் அலுவலகம் தற்போது யாழ். செயலகத்துக்கு அண்மையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (55)

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் :கே.மதுஷன்
முகவரி:பலாலி கிழக்கு, வசாவிளான்.

இரண்டாவது அகவையில்



பெயர் : இ.ராஜினி
முகவரி: கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி.

மூன்றாவது அகவையில்



பெயர் :ஜெ.ஜனன்
முக்வரி:நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

## வல்லை வைத்தியசாலையில்

# அமைக்கப்படும் தாதியர் விடுதியில் குறைபாடுகள் குறித்து முறைப்பாடு!

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் 12 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் தாதியர் விடுதி பல குறைபாடுகளைக் கொண்டுள்ளதாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி, யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு முறையீடு செய்துள்ளார்.

கட்டடத்துக்கு யன்னல்கள் சீராக அமைக்கப்படாததால் மழைநீர் உட்புகும் நிலை உட்பட பல குறைபாடுகள் உள்ளதாக முறையிட்டதைத் தொடர்ந்து, யாழ்.மாவட்ட சுகாதார சேவைப்பணிப்பாளர், இது பற்றி உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கட்டட நிர்மாணத்துறைப் பொறியியலாளருக்கு அறிவித்துள்ளார்.

# புன்னாலைக்கட்டுவனில் பரவும் வைரஸ் காய்ச்சல் நோய்!

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வேகமாகப் பரவிவரும் வைரஸ் காய்ச்சலுக்கு ஏராளமானோர் உள்ளாகியிருக்கின்றனர்.

இதனால் பீடிக்கப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்திய மருந்தகத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன், இவ்வைரஸ் காய்ச்சல் மூன்று அல்லது நான்கு நாட்கள் தொடர்ச்சியாக நீடிப்பதாகவும், பின் படிப்படியாக குறைந்து விடுவதாகவும் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (83)

# கிருமிநாசினிப் பாவனையின்றி மாதிரி வீட்டுத் தோட்டச் செய்கை!

## திருநெல்வேலியில் ஆராய்ச்சி

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையம் அறிமுகப்படுத்தி வரும் மாதிரி வீட்டுத் தோட்டச் செய்கையில், முற்றுமுழுதாக கிருமிநாசினிப் பயன்பாடு தவிர்க்கப்பட்டுள்ளதாக முகாமையாளர் சிவனேசர் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் விவசாய கிருமிநாசிகளின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும், இதனால் சூழல் மாசடைவதுடன் பல்வேறு நோய்களும் நுகர்வோருக்கு ஏற்படடு வருகின்றன. இதனால் கிருமிநாசினிகள் இன்றி பயிர்ச்செய்கை மேற்கொள்வது பற்றி ஆராய்வதுடன், மேற்கொண்டு இதனால் ஏற்படும் பயன்களை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (96)

# அமைதிச் சூழல் நீடிக்க குப்பிளானில் கணபதி ஹோமம்!

(வலி.வடக்கு)

இன்றைய அமைதிச் சூழ்நிலை நீடிக்கவும், தமிழ் மக்களுக்கு சுபீடச வாழ்வு கைகூடவும் விநாயகப் பெருமானின் அருள்வேண்டி மாபெ ரும் "கணபதி ஹோமம்" ஒன்று குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று நடைபெறவிருக்கிறது.

சிவஸ்ரீ.சி.குமாரராஜக்குருக்கள் தலைமையில் 10 குருமார்கள் கலந்துகொண்டு இந்த கணபதி ஹோமத்தை நடத்தி வைப்பார்கள்.

விநாயகர் பெருங்கதை உற்சவம் நடைபெற்றுவரும் இவ்வேளையில் இக்கணபதி ஹோமம் நடைபெறுவது, மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (105)

# பேராதனையில் இருந்து வந்த அதிகாரிகள் பாதீனியக் களை குறித்து பரிசோதனை!

## ஒழிப்பு நடவடிக்கைக்கு முன்னோடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பரவிவரும் பாதீனியங்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராய, பேராதனையிலிருந்து விவசாயத் திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

அரசாங்கத்தின் பணிப்பின்பேரில் வருகை தந்த 5 பேர் கொண்ட இக்குழுவினர், குடாநாட்டில் பாதீனியம் பரவிவரும் பிரதேசங்களைப் பார்வையிட்டு அங்குள்ள பாதீனியக் களைகளைப் பரிசோதித்தனர்.

இருதினங்கள் தங்கியிருந்த இவர்கள், பாதீனியத்தின் வளர்ச்சி அதிகமாகக் காணப்படும் வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்குப் பிரதேசங்களுக்கும் வடமராட்சிப் பிரதேசத்திற்கும் சென்று ஆய்வுகளைச் செய்தனர்.

இவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு, குடாநாடடில் பரவிவரும் பாதீனியத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரவிவரும் பாதீனியத்தினை கட்டுப்படுத்துவது தொடர்பாக இன்னொரு குழு வவுனியாவில் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# புல்லுக்குளத்தைப் புனரமைத்து யாழ். நகரில் நீச்சல் தடாகம்!

## மாநகரசபை அடுத்த வருடம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டில் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கை புனரமைத்து பல வசதிகளுடன் கூடிய நவீன முறையில் திருத்தி அமைத்து மக்கள் பாவனைக்கு விடுவதென்றும் முனீஸ்வரன் வீதியிலுள்ள புல்லுக்குளத்தை புனரமைத்து அதை நவீன வசதிகள் கொண்ட ஓர் நீச்சல் தடாகம் ஆக்குவதெனவும் யாழ். மாநகரசபை தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

அடுத்த ஆண்டிலிருந்து போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடும் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள், தனியார் பேருந்துகள் ஆகியவற்றை, யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்கு முன்னாலுள்ள கே.கே.எஸ் வீதியினால் போக்குவரத்துச் செய்ய அனுமதிப்பதென்றும் - முன்பு யாழ்ப்பாணத்தில் அழகுடன் காட்சியளித்த சுப்பிரமணியம் பூங்காவை புனரமைத்து, அதை மீண்டும் மக்கள் பாவனைக்கு விடுவது போன்ற பல செயற்பாடுகளை யாழ்.மாநகர சபை அடுத்த ஆண்டில் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(லி)

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# பரிதியாய் எழும்




- நிர்மலன் -
உதவி:- கௌரிதாசன்

# சாதனை வீரன்



இ.உதயகுமார்

**2002** ஆம் ஆண்டில் களுத்துறையில் நடைபெற்று முடிவடைந்த சமாதான விளையாட்டு விழாவில் யாழ். விளையாட்டு வீரர்கள் தமது திறமையை நன்றாகவே வெளிக்காட்டியிருந்தார்கள். இவர்களுள் ஒருவர் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இளையதம்பி உதயகுமார். இவர் பரிதிவட்டம் வீசும் நிகழ்வில் முதலிடம் பெற்றுத் தங்கப்பதக்கம் தட்டிக்கொண்டவர். இவரது சாதனையின் பாதை - எவ்வாறு வளர்ச்சியடைந்து, இந் நிலையை அடைய முடிந்தது என்று அறிந்து கொள்ள அவரைச் சந்தித்தோம்.

1974 இல் பிறந்த இவர் சிறு வயது முதலே விளையாட்டுத் துறையில் இனங் காணப்பட்டவர். 1983 இல் யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் 9 வயதுப் பிரிவில் 75m, 50m, பழம் பொறுக்குதல் நிகழ்வுகளில் போட்டியிட்டு சம்பியன் பட்டம் பெற்றுக்கொள்கிறார். தன் இடைநிலைக் கல்வியைத் தொடருவதற்காக கரவெட்டி யா/விக்னேஸ்வராக் கல்லூரியில் இணைந்து அங்கும் தன் விளையாட்டுத் திறமைகளைக் காட்டி நிற்கின்றார். 1986 முதல் 1987, மற்றும் 1990 வரை (அசாதாரண காலங்கள் தவிர) 100m, 75m, நீளம் பாய்தல், பின் பாடசாலை இறுதி நாட்கள் வரை 100m, குண்டெறிதல் (சரியான வார்த்தைப் பிரயோகம் போடுகுண்டு என்று கூறுகிறார்) என்று எல்லா நிகழ்வுகளிலும் தன் முத்திரை பதிக்கிறார். இதேவேளை உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம் என்பவற்றிலும் இயல்பாகவே தன் திறமையைப் பளிச்சிடச் செய்கின்றார். பாடசாலைக் காலப்பகுதியில், கோட்டம், மற்றும் வடமராட்சிப் பாடசாலைகள் மட்டத்தில் 100m, 200m, குண்டெறிதல் நிகழ்ச்சிகளில் நிறையப் பதிவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றார். இக்காலகட்டத்தில் குறிப்பிடத்தக்கது, 1992 இல் 100m ஓட்டத்தில் பாடசாலைப் பத்து வருடச் சாதனையை முறியடித்ததும், குண்டெறிதலில் சாதனை நிலைநாட்டியதுமாகும் என்று கூறுகிறார்.

பாடசாலைக் காலத்தின் பின்தான் தன் உண்மையான விளையாட்டுத்துறை வாழ்க்கை ஆரம்பிக்கிறது எனக கூறும் இவர், 1992இல் நடைபெற்ற பிரதேச செயலர் மட்டப் போட்டிகளில் அத்துளு அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் கலந்துகொண்டு குண்டெறிதலில் மூன்றாம் இடம் பெற்றுக்கொள்கிறார். தனது விளையாட்டுச் சாதனைகளின் அத்திவாரமே அத்துளு அம்பாள் விளையாட்டுக் கழகம்தான் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார்.

இன்று இவரது முதன்மை விளையாட்டாக இருக்கும் பரிதி வட்டம் வீசுதல் நிகழ்வில், முதன்முதலில் கலந்துகொண்டது 1993 இல் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் விளையாட்டுப் போட்டிகளின் போதுதான் என்று கூறும் இவர், அதில் தான் மூன்றாம் இடம்பெற்றமையையும், 94 இன் பின் இன்று வரை குண்டெறிதல், பரிதிவட்டம் வீசுதல் நிகழ்வுகளில் தனக்கே முதலிடம் என்று பெருமிதம் அடைகிறார். இதன் தொடர்ச்சியாக 1993 இல் யாழ்.மாவட்டத்தில் பரிதி வட்டம் வீசுதலில் மூன்றாம் இடம்பெறுகின்றார். 1994 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை குண்டெறிதல், பரிதிவட்டம் வீசுதல் இரண்டு நிகழ்வுகளிலும் இவரே தொடர்ந்து முதலிடம் பெற்றுவருகின்றார்.

1998 இல் பரிதிவட்டம் வீசுதலில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற இவர் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம்பெறுகிறார். இதுமுதல் 2002 வரை - யாழ்.மாவட்டத்தில் பரிதி வட்டம், குண்டெறிதல் இரண்டினதும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்கின்றார். 2001 ஆம் ஆண்டில் பரிதிவட்டம்

**பரிதி வட்டம் வீசுதலில் உதயனின் சாதனைகள்**

**1996 - 2002 - மாவட்ட மட்டம் - *1 ஆம் இடம்***

**2001 - மாகாண மட்டம் - *1 ஆம் இடம்* 36.49 (புதிய சாதனை)**

**2002 - தேசிய இளைஞர் விளையாட்டு விழா - *3 ஆம் இடம்***

**2002 - களுத்துறை சமாதான விளையாட்டு விழா - *1 ஆம் இடம்***

வீசுதலில் 36.49m தூரம் எறிந்து, முன்னைய சாதனையை முறியடித்ததுடன், 2002 இலும் முதலாம் இடம்பெறுகின்றார். இக்கால கட்டங்களில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய தேசிய மட்ட, மாவட்ட மட்டப் போட்டிகளிலும் வெற்றிகள் பெறுகின்றார். இவரது சாதனைப் பட்டியலை நிரம்பவே குறுக்க வேண்டியேற்படினும் தடகளத்தின் பல பிரிவுகள் மற்றும் பெருவிளையாட்டுக்கள் அனைத்தும் இவருக்கு அனாயாசமானதாகத் தெரிவதைக் குறிப்பிட வேண்டும்.

தனது முழங்காலில் ஏற்பட்ட ஒரு நோவின் காரணமாகத் தடத்தில் இருந்து களத்திற்கு மாறிப் பரிதிவட்டத்தைத் தெரிவுசெய்த இவர் அதிலே ஆழமான தடம்பதித்திருக்கிறார்.

ஆறடி மூன்றங்குல உயரம் கொண்ட மிகக் கம்பீரமான தோற்றம் கொண்ட உதயன், கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராகக் கடமை புரிகின்றார். பதில் பிரதேச செயலர் சிவபுண்ணியம், முன்னாள் நிர்வாக அதிகாரி S.A.யோசேப் மற்றும் அதிகாரிகளின் ஒத்துழைப்பில்லாதிருப்பின் தனது பயிற்சிகளை இடைநிறுத்த வேண்டியேற்பட்டிருக்கும். ஆனால், அவர்களின் உதவி மிகப்பெரும் ஒத்துழைப்புச் செய்தது என்கிறார் நெகிழ்வுடன். பயிற்சி பற்றிக் கதைத்தபோது, முறையான பயிற்சி என்பது மிகப்பெரியதொரு விடயம். அது எனக்கு மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் யாருக்குமே கிடைக்கவில்லை. ஏதோ என்னால் இயன்றளவில் சரியான வழிகாட்டுதலில், சென்று கொண்டிருக்கிறேன் என்பவர் - திருவாளன்பன், ரீ.எம்.வேதாபரணம், ரி.வரதாசன், கே.முகுந்தன் (S.O), கே. டபிள்யூ.விமலராஜன், எஸ். திருமாறன் (S.O) என்பவர்களை நினைவு கூர்கின்றார். அடிப்படையான ஒரு நிலையில் இருந்து ROTATION முறையில் பரிதிவட்டம் வீசும் நுணுக்கத்தைக் கற்றுத்தந்த ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ரத்தினசிங்கம் இவரது நன்றிக்குரியவராகின்றார்.

அடிப்படை வசதிகள், விளையாட்டு வீரர்களுக்கான பிரத்தியேக உணவு வசதிகள், தொடர்ச்சியான வைத்தியப் பரிசோதனைகள், பிற இடங்களுக்குச் செல்லும் குழுவினருக்கு என்று ஒரு வைத்தியர்- இவையெல்லாம் பற்றி விலாவாரியாக எம்முடன் கலந்துரையாடுகிறார் உதயன். சர்வதேச விளையாட்டுத்துறை சார்ந்த பல விடயங்களை ஆதாரமாகக் காண்பிக்கும் அவர், அவற்றை எண்ணிப் பெருமூச்சுத்தான் விடுகிறார்.

எனினும் - இவற்றைச் சிறிது சிறிதாகவாவது கட்டியெழுப்பும் முயற்சிகள் செய்யப்படுவது சம்பந்தப்பட்டோரின் பாரிய பொறுப்பு என்று கூறுகிறார்.

மிகுந்த உணர்வுபூர்வமாகக் கதைக்கும் உதயன், காத்திரமான கருத்துக்களை முன்வைக்கிறார். கிரிக்கெட் விளையாட்டின் தாக்கம் செல்வாக்கு ஆதிக்கம் செலுத்துவது தவறல்ல. ஆனால் உள்ளூரின் மற்றைய விளையாட்டுகள் எல்லாவற்றையும் (உதைபந்தாட்டம் உட்பட) ஓரம் கட்டும் ஆபத்துப் பற்றிப் பேசுகிறார். மேலும் இங்கு உள்ள மிகக் கொஞ்ச வாய்ப்பு வசதிகளும், பயிற்சி அனுபவங்களும் யாழ். நகரத்தில் மையப்படுத்தப்பட்டு, ஏனைய பகுதிகள் இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளப்படும் உணர்வு ஏற்படுவதாக ஆதங்கப்படுகின்றார்.

அனுசரணை என்பது எவ்வளவு தூரம் விளையாட்டுக்கு அவசியம் என்பது தெரிந்ததே. அதுபற்றி உதயன் பேசும்போது நாமும் கூனிக்குறுகித்தான் நிற்கவேண்டியிருக்கிறது. எமது மண்ணின் மைந்தர்களுக்கு ஒரு பரிசு, ஊக்குவிப்பு எந்தளவில், எந்த வகையில் வழங்கப்படுகிறது என்று வினவுகிறார். அனுசரணை இன்மையால் துறைவிட்டு விலகிய பலரின் பெயர்களைக் குறிப்பிடுகிறார்.

தன் விளையாட்டை ஒத்த தடகள



நிகழ்ச்சிகள் பற்றிப் பேசும்போது, இது தனி மனிதனின் சாதனை. இதற்கு ஒரு தனி மதிப்புண்டு. அதேபோல் கூடியளவு கைவிடப் படக்கூடிய ஆபத்தும் உண்டு. ஆகவே எங்களை வளர்க்க எங்கள் மண் உதவ வேண்டும் என்கிறார்.

திருமணமாகி மூன்று வயது மகளுக்குத் தந்தையான உதயன் - தன் மகளை ஒரு விளையாட்டு வீராங்கனையாக மாற்றுவேன் என்கிறார். ஏறத்தாழ பதினைந்து வயதில் ஒருவர் - விளையாட்டுத்துறையில் இனங் காணப்பட்டு அதில் இருந்து சிறந்த வீரரை உருவாக்க முடியும் என்று நம்பும் இவர், தன துறையில் ஒரு வீரனையாவது உருவாக்குவது தனது கடமை என்கிறார். தேசிய மட்டப் போட்டிகளில் என்றோ ஒருநாள் முத்திரை பதிப்பேன் என்பவர், 40 வயது வரையில் எனது துறையில் ஈடுபடும் திடமும், திறனும் எனக்குண்டு என்று கூறுகின்றார்.

தனது பாடசாலையான கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் தடகள மற்றும் உதைபந்தாட்டத் துறையில் உதவிகள் புரியும் அவர், இன்று விளையாட்டுத்துறையில் சிறுவருக்கு எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது என்கிறார். யாழ்.மாவட்ட விளையாட்டு வீரர்கள் தேசிய மட்டச் சாதனைகள் புரியும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று தன்னம்பிக்கையுடன் கூறும் உதயன், எல்லா வித தடைகளையும் தகர்த்தெறிந்து சகல அமைப்புகளும், நிறுவனங்களும், அரச துறையும், தனியாரும் ஒன்றுபட முடியுமாயின் இது மிகச் சுலபமானது என்று முடிக்கிறார்.

எத்தனை சிறந்த வீரர்கள் எம்மண்ணில் இருக்கிறார்கள் என்பதை இவர் கூறும் எண்ணிக்கையில் இருந்து அறிந்து ஆச்சரியப்பட்டோம். உதயன் உட்பட அனைவரும் இன்னும் வளரவேண்டும், சாதனை படைக்க வேண்டும் என்று விளையாட்டின் சார்பில் வாழ்த்துகின்றோம். எமக்காக நேரம் ஒதுக்கித்தந்த சாதனை வீரன் உதயனுக்கு நன்றி கூறுகின்றோம்.

---

# கங்குலியின் கலைந்த கனவுகள்

- வி.ஏ.கோபி -



இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித்தொடர் மிக விறுவிறுப்பாக நடந்து முடிந்துவிட்டது. போட்டித் தொடரை இந்தியாவே வெல்லும் என்று மிக எளிதாக எதிர்பார்த்ததற்கு மாறாக, மிகச் சிறப்பாக ஆடி மேற்கிந்தியத்தீவுகள் அணி, வெற்றியை நிலைநாட்டிவிட்டது. இதில் குறிப்பாக இறுதியாட்டத்தில் மிக அபாரமாக ஆடிய சாமுவெல்ஸ், இளம் வேகப்பந்து வீச்சாளர் ஜேர்மயின் லோசன் ஆகியோரின் பங்கே இறுதியாட்டத்தைத் தீர்மானித்தது. இந்த ஆட்டத் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வீரர்கள் ஆடிய வியக்கத்தக்க ஆட்டமானது ரசிகர்கள், கிரிக்கெட் ஆய்வாளர் மத்தியில் இன்னுமொரு எதிர்பார்ப்பையும் தூண்டிவிட்டது.

ஆரம்ப காலங்களில் இரண்டு தடவை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி யாராலும் அசைக்க முடியாத ஒரு அணியாகத் திகழ்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, கடந்த சில வருடங்களாக தொடர் தோல்விகளால் துவண்டுபோனது. அத்துடன் பல ஆட்டங்களில் மிகக் குறைந்த ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுக்களையும் இழந்து மிகக் கேவலமான முறையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சக்தியிழந்து நின்றது. அதனூடு பங்களாதேஷ், கென்யா அணிகளுடன் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் பின்தள வரிசையில் நின்றது என்பது உண்மை. ஆனால் அண்மையில் இந்தியாவில் நடந்த போட்டித் தொடரைப் பார்க்கும்போது எதிர்வரும் உலகக்கிண்ணப் போட்டியை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு வாய்ப்பாக உள்ள அணிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணியையும் சேர்த்துக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பே அநேகர் மனதில் துளிர்விடுகிறது. இந்தியாவில் நடந்த ஏழு ஒருநாள் போட்டித்தொடரில் நான்கு போட்டிகளை வென்று மேற்கிந்தியத் தீவுகள் அணி, தொடரைக் கைப்பற்ற வாய்ப்பாக இருந்த காரணம் என்ன..?



சாமுவெல்ஸ்

இதற்குரிய விடைகள் பல. அவற்றுள் ஒன்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அசைக்க முடியாத துடுப்பாட்ட வரிசையாகும் (**Batting Order**). ஏனெனில், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்டத்தை எடுத்து நோக்கும்போது அநேக போட்டிகளில் 5 விக்கெட்டுக்களுக்கு மேல் இழந்தது குறைவு. இது இறுதி 10 ஓவர்களிலும் ஓட்ட வேகத்தைக் கூட்டி, இலக்கை இலகுவாக அடைய வாய்ப்பாக இருந்தது. அத்துடன், தொடரில் மூன்று சதங்களைக் குவித்து தொடர் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட கைல்ஸ் இவர்களுடன் கைன்ட்ஸ், சர்வான், சந்திரபோல், சாமுவெல்ஸ் - போன்றோரின் அதிரடி ஆட்டங்கள் அந்த அணியின் வெற்றிக்கு இலகுவாக வழிவகுத்துச் சென்றது. சச்சின், ஷகீர்கான், இறுதியாட்டத்தில் கங்குலி ஆகியோர் இல்லாததால் மேற்கிந்தியத்தீவுகள் அணி, உளவியல் ரீதியல் தெம்படைந்து கொண்டதும் சிறு காரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை பந்து வீச்சில் முற்றாகத் தவறு என்றும் கூற முடியாது. மே.இ.தீவுகள் அணியின் அதீத ஆற்றலால்தான் இந்திய பந்துவீச்சாளர்களின் பந்து வீச்சையும் மீறி ஓட்டவிகிதத்தை உயர்த்தி வெற்றி இலக்கை எட்டமுடிந்தது. ஆனால் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களில் லக்ஸ்மன், (6 ஆம் பக்கம் பார்க்க)

Sports Sports Sports Sports Sports

# சற்று திரும்பிப் பார்ப்போமா...

எல்லோரும் ஆர்வமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் அண்மித்துவிட்டன. தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, கென்யா மூன்று நாடுகளும் இணைந்து நடாத்தும் இப்போட்டிகள் 2003 பெப்ரவரியில் ஆரம்பமாகி ஒரு மாதத்துக்கும் மேலாக நடைபெறும். இந்த வேளையில், முதன் முதலாக நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி பற்றியும் இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளுதல் நல்லதல்லவா.

முதலாவது உலகக் கிண்ணப் போட்டி 1975 இல் இங்கிலாந்தில் நடைபெற்றது. இப்போட்டிகளுக்கு அனுசரணையாளர்களாக இருந்தவர்கள் புருடென்சல் அசுரன்ஸ் கம்பெனியினராவர். இச்சுற்றுப் போட்டியில் எட்டு அணிகளே பங்குபற்றின. இது 60 ஓவர்கள் கொண்ட போட்டித் தொடராக அமைந்திருந்தது. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் கிழக்கு ஆபிரிக்க அணிகள் கலந்துகொண்டன. இக்காலகட்டத்தில் இலங்கை டெஸ்ட் அந்தஸ்த்துப் பெற்றிருக்கவில்லை. அரை இறுதிப் போட்டிக் கட்டத்தை சுற்றுப் போட்டி அடைந்தவேளையில், மேற்கிந்திய அணி - நியூசிலாந்து முதலாவது அரை இறுதிப் போட்டியிலும், இங்கிலாந்து - அவுஸ்திரேலியா இரண்டாவது அரை இறுதிப் போட்டியிலும் மோதிக்கொண்டன. இறுதியாட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டது போலவே அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இறுதியாட்டமாக அமைந்து, மேற்கிந்திய அணி முதலாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் சம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது. இந்த அணிகளின் தலைவர்கள் இருவரும் மிகப் பிரசித்திபெற்ற கிரிக்கெட் வீரர்கள். மேற்கிந்திய அணிக்குத் தலைமை வகித்தவர், இன்று பிரபலயமான ஆட்ட மத்தியஸ்தராக விளங்கும் கிளைவ் லொயிட் ஆவார். அவுஸ்திரேலிய அணியின் தலைவராக இருந்தவர் இன்று பிரபலமான கிரிக்கெட் ஆட்ட வர்ணணையாளரான இயன் சப்பல் ஆவார். இந்த இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி பெற்ற ஓட்டங்கள் 291/8. இதில் கிளைவ் லொயிட் குவித்த ஓட்டங்கள் 102. இதுவே இவருக்கு ஆட்டநாயகன் பரிசையும் பெற்றுக் கொடுத்தது. பதிலளித்து ஆடிய அவுஸ்திரேலியா தனது சகல விக்கெட்டுகளையும் 58.4 ஓவர்களில் இழந்து 274 ஓட்டங்கள் மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்த வகையில் முதல் உலகக் கிண்ணப் போட்டி என்ற வகையில் எல்லாமே சாதனைகளாக அமைந்தன. துடுப்பாட்டத்தில் நியூசீலாந்தின் கிளென் டேர்னர், கிழக்கு ஆபிரிக்காவிற்கு எதிராக ஆட்டம் இழக்காமல் 171 ஓட்டங்கள் பெற்றார். இதேவேளை, இங்கிலாந்தின் டெனிஸ் ஏமிஸ் இந்தியாவிற்கு எதிராக 137 ஓட்டங்கள் பெற்றார். பந்து வீச்சில் அவுஸ்திரேலியப் பந்து வீச்சாளர் கெரி கில்மோர் இங்கிலாந்துக்கு எதிராக 14 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைச் சாய்த்தார். அதேவேளை, பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டமொன்றில் அவுஸ்திரேலிய டெனிஸ் லிலி 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஓட்ட எண்ணிக்கையைப் பொறுத்தவரை இந்தியாவிற்கு எதிராக 4 விக்கெட் இழப்பிற்கு இங்கிலாந்து 334 ஓட்டங்களைக் குவித்தது. பாகிஸ்தான் அணி, அவுஸ்திரேலியா, இலங்கைக்கு எதிரான ஆட்டங்களில் முறையே 330, 328 ஓட்டங்களைக் குவித்தது.



கிளைவ் லொயிட்



டெனிஸ் லிலி

முதல் உலகக் கிண்ணப் போட்டிகள் முடிவடைந்து நான்கு வருடங்களின் பின் 1979 இல் இரண்டாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெற்றன. இவையும் முதலாவது போட்டிகள் போலவே நடைபெற்றாலும் கிழக்கு ஆபிரிக்காவுக்குப் பதிலாக கனடா பங்கு கொண்டது. இக்காலகட்டத்திலும் இலங்கை டெஸ்ட் அந்தஸ்துப் பெற்றிருக்கவில்லை. ஆனால், முதன்முதலாக உலகக் கிண்ணப் போட்டிகளின் வெற்றியை இந்தியாவை 47 ஓட்டங்களால் வெற்றிகொண்டதன் மூலம் சுவைத்தது.

இந்தப் போட்டிகளில் இங்கிலாந்து நியூசிலாந்தைத் தோற்கடித்தும் மேற்கிந்தியத் தீவுகள் பாகிஸ்தானைத் தோற்கடித்தும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன. இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்கியவர் மைக் பிரெயர்லி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குத் தலைமை தாங்கியவர் மீண்டும் கிளைவ் லொயிட். இந்த ஆட்டத்தில் விவியன் றிச்சர்ட்ஸ் ஆட்டமிழக்காமல் 138 ஓட்டங்களைக் குவித்து ஆட்டநாயகனானார். மேற்கிந்திய அணி 60 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 286 ஓட்டங்கபைப் பெற, பதிலளித்து ஆடிய இங்கிலாந்து 194 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதில் ஜோல் கார்ணர் 38 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதனைத் தொடர்ந்து 1983 இல் மூன்றாவது உலகக் கிண்ணப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியிலும் மேற்கிந்திய அணியே வெற்றிபெறும் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. அப்படி வெற்றி பெற்று **HATRIC** பெறுவது மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குக் கடுமையாகவும் இருந்திருக்க போவதில்லை. ஆனால் நடந்தது என்னவோ, இந்தியா வென்றதுதான்.



விவியன் றிச்சர்ட்

– கண்ணா –

---

# இங்கும் இப்படியானவர்கள் இருந்தால்...



காலம் பொன்னானது. இழக்கப்பட்ட நிமிடம் இழக்கப்பட்டதுதான். அது மீண்டும் திரும்பவரப் போவதில்லை. அப்படியாயின் இந்த நிமிடத்தில் என்ன செய்யப் போகிறோம் என்று இறுதி நேரத்தில் தடுமாறுவதை விட, எதிர்வரும் நிமிடத்தை எவ்வாறு பயன்படுத்தப் போகிறோம் என்று சிந்திப்பது வெகு பொருத்தமல்லவா. விளையாட்டுத் துறையின் அதீத வளர்ச்சி சர்வதேச ரீதியில் எவ்வளவு காலம் முன்னோக்கிப் பார்க்கிறது என்பது வியப்பாக இருக்கின்றது. 2012இல் நடைபெற இருக்கும் உலக விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டிகளை - இங்கிலாந்து, தான் நடாத்த விரும்புகின்ற அதேவேளை - அந்தச் சந்தர்ப்பமும் கிடைக்கும் போலத் தெரிகின்றது. இதற்குப் பிரித்தானியாவின் சகல தரப்பின் ஆதரவும் நிறைவாகவும் இருக்கின்றது. இது தொடர்பில் முக்கியமான தேவை நிதிவசதி. இதனைப் பெற்றுக்கொள்வதில் தான் எத்தனை இடர்ப்பாடுகள். பாரிய வர்த்தக நிறுவனங்கள் இந்த வகையில் பெரும் உதவிகள் புரிந்துவரும் வேளையில், இடையில் சில தடங்கல்கள் ஏற்பட்டு விடுவதும் உண்டு.

லொத்தர் விநியோக நிறுவனமான 'ஸ்போட் இங்லண்ட்' பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவிற்கு 165 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களையும், வெம்பிளி அரங்கைப் புனரமைப்புச் செய்ய 120 ஸ்ரேலிங் பவுண்களையும் முன்னதாக வழங்கியிருந்தது. ஆனால் லொத்தர் விற்பனை வீழ்ச்சியின் காரணமாக இனிமேலும் நிதி அனுசரணை செய்வது இல்லாததொன்றாக இருக்கின்றது என்று தற்போது இவர்கள் அறிவித்துள்ளனர். லொத்தர் மூலம் கிடைக்கும் பணத்தின் பயன்பாட்டுக்குப் பல அழுத்தங்கள் இருக்கின்றன. தற்போது பல சமூக நலத் திட்டங்களுக்குப் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் நிதி வளத்தை ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குத் திருப்புவதில் அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை. இது சமூக நலத் திட்டங்களுக்கான பணத்தை அபகரிப்பதாக இருக்கும் என்கிறார் ஒரு லொத்தர் அதிகாரி. ஆனால் பிரித்தானிய ஒலிம்பிக் சங்கப் (**BOA**) பிரதிநிதி ஒருவர். இவர்களின் ஒரு சதமும் எங்களுக்குத் தேவையில்லை. எங்களுக்கு வரும் நிதி பிரித்தானிய கருவூலமூடாகவும் பொருத்தமான அரச நிறுவனங்கள் ஊடாகவும் வந்து சேரும் என்கிறார். அத்துடன், இது அரசாங்கத்தினதும் பொறுப்பு ஆகும் என்கிறார். இந்நிலையில், லொத்தர் சபையை மட்டும் பிரித்தானிய ஒலிம்பிக் சங்கம் நம்பியிருக்கப் போவதில்லை என்பது தெளிவு. என்ன விலை கொடுத்தாவது 2012 ஒலிம்பிக திருவிழாவை இங்கிலாந்தில் நடத்த முயற்சிப்பார்கள் என்பதும் தெளிவு.



இதேவேளை - போட்டு உடைக்கிறேன் பார் என்ற கோதாவில் லொத்தர் சபை கருத்துத் தெரிவிக்கவில்லை என்பதையும் மனங்கொள்ள வேண்டும். அவர்களின் கருத்து, ஆழ்ந்த கவனத்தில் எடுக்கப்படத்தக்கது. இந்த நாட்டின் விளையாட்டுத்துறையை உண்மையாக அபிவிருத்தி செய்வதாக இருந்தால், சரியான முதலீடானது உட்கட்டுமான அமைப்பினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் முதலீடாகவே இருக்க முடியும். வெம்பிளி அரங்கை அதிநவீனமாக்குவதும், ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் உரிமை பெறப் போராடுவதும், முன்னர் கூறிய விடயங்களின் வெற்றியிலேயே பொருத்தமாக அமையும் என்கிறார்கள். மேலும் அழுத்தமாக ஒன்றைக் கூறுகிறாாகள்- "அப்படியாயின் பாடசாலைச் சிறார்களின் விளையாட்டுத் தேவைகள், விளையாட்டுத்துறை பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கு இம்முதலீடுகள் உட்பாய்ச்சப்படுவதை உறுதி செய்யுங்கள்'' என்று. எங்கும் எப்போதுமாக விளையாட்டுத்துறையைப் பொறுத்து, மேற்கண்ட வாசகங்கள் வைரவரிகள் அல்லவா. பல லட்சம் விளையாட்டு வீரர்களின் மன ஆதங்கத்தை நாடி பிடித்துப் பார்த்தது போல எவ்வளவு கச்சிதமாக வார்த்தைகள் விழுந்திருக்கின்றன. இப்படியான ஒரு சந்தர்ப்பமும் சிந்தனையும் யாழ்ப்பாணத்தில் இருந்தால் நிச்சயம் சர்வதேசத் தரம் நோக்கி எமது வீரர்கள் வேகமாகப் போவார்கள். அதேவேளை, இச்சிந்தனைப் போக்கு நிதி வசதியுடையவர்களிடம் இல்லை என்று எழுந்தமானமாகப் புறந்தள்ளிவிட முடியாது எனினும், இன்னும் இன்னும் பெற சம்பந்தப்பட்ட நாம்தானே மிகுந்த சிரமம் எடுக்க வேண்டும். அத்தகையோர் விரைந்து செயற்பட வேண்டும். வெற்றி நிச்சயம்.



– நிர்மலா –

## கங்குலியின்...

ட்ராவிட் போன்றோர் சிறப்பாக ஆடினாலும் கூட, ஓட்ட விகிதம் (**Strike Rate**) அதாவது - மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்களைப் போல் குறைந்த பந்துவீச்சுக்களை எதிர்கொண்டு, கூடிய ஓட்டங்களைப் பெறும் திறனைப் பெறமுடியவில்லை. இவர்கள் அடிக்கவேண்டிய நேரத்தில் அடித்து ஆடாமல் தங்களுடைய சதங்களுக்காகவும் அரைச சதங்களுக்காகவுமே கவனத்தைச் செலுத்தினார்கள். இது அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையை உரிய நேரத்தில் உயர்த்த முடியாமல் இருந்தது.

எது எப்படியோ-முன்னணி வீரர்கள் சிலர் விளையாடாமையினாலேயே இந்திய அணி தோல்வியைச் சந்தித்தது என்று கூறினாலும்கூட, இந்தத் தோல்விகளால் உளவியல் ரீதியில் சற்றுப் பாதிப்பைப் பெற்றிருக்கும் இந்திய அணி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் தொடங்கவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டிகளில் தங்களின் பெயரையும் நிலைநாட்ட வேண்டுமென்றால் தம்மைப் பலப்படுத்துவதோடு, உளவியல் ரீதியிலும் பலம் பெறவேண்டும். இதற்காக டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி நியூசிலாந்தில் தொடங்கவிருக்கும் அந்த அணிக்கெதிரான டெஸ்ட், மற்றும் ஒரு நாள் போட்டித் தொடரில் முன்னணி வீரர்களுடன் விளையாடவிருக்கும் இந்திய அணி - அப்போட்டியில் தங்களுடைய பலத்தை மீண்டும் நிருபித்து, பலம் பெறவேண்டும்.



# எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான

## திறந்த போட்டிப் பரீட்சை — 2002 Dec.



**1 மணித்தியாலம்** **உளச்சார்பு** **(மாதிரி வினாத்தாள்)**

1-5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள ஆறு சொற்களுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தால் (உதாரணம்: இலக்கணம், கருத்து) ஏனைய சொற்களுடன் ஒத்தமையவில்லை. அச்சொல்லை இனங்கண்டு அதைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. 1) குளம் 2) நதி 3) வாவி 4) ஏரி 5) குட்டை 6) தேக்கம் (...................)
2. 1) வெப்பம் 2) தட்பம் 3) கப்பம் 4) நுட்பம் 5) துக்கம் 6) சூக்குமம் (...................)
3. 1) குரும்பை 2) குலை 3) கொத்து 4) மஞ்சரி 5) கதிர் 6) தாறு (...................)
4. 1) துயில் 2) சயனம் 3) உறக்கம் 4) ஊக்கம் 5) தூலம் 6) அனந்தல் (...................)
5. 1) கோழி 2) காகம் 3) கிளி 4) பருந்து 5) கழுகு 6) மைனா (...................)

6-10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்கு பொருத்தமான எண்ணை/எழுத்தை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

6. A,T,C................ (...........)
7. (ABC), (XWV), (GHI), ............... (...........)
8. 172, 84, 40, 18 ................. (...........)
9. 12 (336) 14
   15 (.....) 16 (............)
10. 1/4 1/16 1/64 (............)

11-15 வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.
* மீரா, கீதா, கமலா, ராதா, சாந்தி, அமுதா, தேவி ஆகியோர் வட்ட மேசை ஒன்றைச் சுற்றி இருக்கின்றனர்.
* தேவிக்கு வலப்பக்கத்தில் இரண்டாவதாக அமுதா இருக்கின்றாள்.
* அமுதாவுக்கு அடுத்ததாக கீதா இருக்கின்றாள். ஆனால் கமலாவுக்கு கிட்ட இல்லை.
* கமலாவுக்கு அடுத்ததாக இருக்கும் சாந்தி, தேவிக்கு வலப்பக்கத்தில் மூன்றாவதாக இருக்கின்றாள்.
* மீராவுக்கும் கமலாவுக்கும் இடையே ராதா இருக்கின்றாள்.

11. தேவிக்கு இடப்பக்கத்தில் அடுத்ததாக யார் இருக்கின்றாள்.
    1) ராதா 2) மீரா 3) கமலா 4) அமுதா 5) சாந்தி
12. கீதாவுக்கு இடப்பக்கத்தில் நான்காவதாக யார் இருக்கின்றாள்.
    1) மீரா 2) அமுதா 3) கமலா 4) சாந்தி 5) தேவி
13. கீதாவுக்கு நேர் எதிராக யார் இருக்கிறாள்
    1) மீரா 2) கீதா 3) ராதா 4) கமலா 5) சாந்தி
14. தேவிக்கும் ராதாவுக்கும் இடையில் யார் இருக்கின்றாள்
    1) மீரா 2) கீதா 3) சாந்தி 4) அமுதா 5) கமலா
15. அமுதாவிற்கு வலப்பக்கத்தில் இரண்டாவதாக யார் இருக்கின்றாள்
    1) கீதா 2) தேவி 3) மீரா 4) ராதா 5) கமலா

16. நான் குறித்த ஒரு தொகைப் பணத்திற்கு 12 மாம்பழங்களை வாங்கினேன். மாம்பழம் ஒன்றின் விலை 20 சதத்தால் குறைந்திருந்தால், நான் 3 மாம்பழங்களை கூடுதலாக வாங்கியிருக்கலாம். நான் என்ன விலைப்படி மாம்பழங்களை வாங்கினேன்.
    1) 2.00 2) 1.50 3) 1.00 4) 75 சதம் 5) 1.75

17. 18 வருடங்களுக்கு முன்பு ஒரு தகப்பனின் வயது அவரது மகனின் வயதிலும் மூன்று மடங்காக இருந்தது. தற்பொழுது தகப்பனின் வயது அவரது மகனின் வயதிலும் இரு மடங்காகும். மகனின் வயது யாது?
    1) 12 2) 24 3) 30 4) 36

18. ஒரு பாடசாலையில் 70% மான ஆசிரியர்கள், பெண்கள். 60% மான ஆசிரியர்கள் திருமணமானவர்கள். ஆண் ஆசிரியர்களில் 2/3 பங்கினர் திருமணமாகாதவர்கள், எனின் திருமணமான பெண்கள் என்ன பங்கினர்.
    1) 6/7 2) 5/7 3) 4/7 4) 3/7 5) 2/7

19. ஒரு சதுரத்தின் ஒரு பக்க நீளம் 100%ஆல் அதிகரிக்கப்பட்டால் அச்சதுரத்தின் பரப்பளவு அதிகரிக்கப்படுவது
    1) 100%ஆல் 2) 200%ஆல் 3) 300%ஆல் 4) 400%ஆல் 5) 500%ஆல்

20. ஒவ்வொரு நாளும் தான் செய்யும் வேலைக்காக ரவி 30 ரூபாவைப் பெறுவதுடன் அதனை மிகச் சிறப்பாக செய்யும்போது 50 ரூபாவைப் பெறுகிறான். 10 நாட்கள் வேலை செய்ததன் பின்னர் ரவி 360 ரூபாவைப் பெற்றான். ரவி எத்தனை நாட்கள் தனது வேலையைச் சிறப்பாக செய்துள்ளான்.
    1) 3 2) 4 3) 5 4) 6 5) 7

21-25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் காணப்படும் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் இடப்பட வேண்டிய எண்ணைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

21.




1) 54 2) 52 3) 50
4) 48 5) 46

22.




1) 275 2) 250 3) 225
4) 215 5) 195

23.




24.




1) 42 2) 56 3) 43 4) 52 5) 40

25.




1) 30 2) 35 3) 28 4) 32 5) 40

26-30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **X,Y** என்னும் இரு கூற்றுக்கள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய ஒவ்வொரு வினாவுக்கும் **A ,B , C,D,E** என்னும் எழுத்துக்களில் உரிய எழுத்தைத் தெரிவுசெய்து, அதனைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
**X,Y** ஆகியன உண்மையாகவும் Y ஆனது **X** ஐ விளக்குவதாகவும் இருப்பின் எழுத்து **A** யையும்,
**X,Y** ஆகியன உண்மையாகவும் **Y** ஆனது **X** ஐ விளக்காததாக இருப்பின் எழுத்து **B** யையும்,
**X** உண்மையாகவும், **Y** பொய்யாகவும் இருப்பின் எழுத்து **C** யையும்,
**X** பொய்யாகவும் **Y** உண்மையாகவும் இருப்பின் எழுத்து **D** யையும்,
**X,Y** ஆகியன பொய்யாக இருப்பின் எழுத்து **E** யையும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

26. X: இலங்கை இடை வெப்பநிலை உள்ள ஓர் நாடு.
    Y: இலங்கை மத்திய கோட்டிற்கு அண்மையில் இருக்கின்றது.
    1)A 2)B 3)C 4)D 5)E

27. X: விற்றமின்கள் சிறந்த உடனலத்திற்கு அவசியமானவை.
    Y: சில விற்றமின்களை அளவுக்கு அதிகமாக உட்கொண்டால் கெடுதி ஏற்படும்.
    1)A 2)B 3)C 4)D 5)E

28. X: கிராம உத்தியோகஸ்தர், எழுதுநர் பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவதற்கு கடின முயற்சி தேவை.
    Y: கடின முயற்சி எடுப்பவர்கள் எல்லோரும் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுகின்றனர்.
    1)A 2)B 3)C 4)D 5)E

29. X: மேம்பாடுடை கணிப்புச்சக்திமிக்க புதிய தனியாள் கணினிப்பொறிகள் அநேகமாக ஒவ்வொரு வருடமும் உற்பத்தியாகின்றன.
    Y: கணினிப் பொறியியறதுறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளினால் கணினிகளின தரத்தை மேம்படுத்த முடிந்தது.
    1)A 2)B 3)C 4)D 5)E

30. X: கோளமயமாதல் 1990ஆம் ஆண்டுகளிலேதான் தோற்றம் பெற்றதன்று. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வியாபாரம் முதலில் எப்போது ஆரம்பிக்கப்பட்டதோ அப்போதிலிருந்தே அது இடம்பெற்று வருகின்றது.
    Y: அபிவிருத்தி அடையும் உலகின் பொருளாதாரக் கட்டமைப்புகளின் மீது கோளமயமாதல் தாக்கம் செலுத்துவதில்லை.
    1)A 2)B 3)C 4)D 5)E

31-33 வரையான வினாக்களில் ஒரு பிரச்சினையும் - **X,Y** என இரு கூற்றுக்களும் தரப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப உமது விடையைத் தெரிவு செய்க.
* பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று **X** மட்டும் போதுமானதெனின் **A** யையும்,
* பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று **Y** மட்டும் போதுமானதெனின் **B** யையும்,
* பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று **X,** கூற்று **Y** இரண்டினையும் ஒன்றாக இணைக்க வேண்டுமெனின் **C** யையும்,
* பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று **X** வேறாகவும், கூற்று **Y**யை வேறாகவும் பயன்படுத்த வேண்டுமெனின் **D** யையும்,
* பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று **X**ம், கூற்று **Y**ம் தரும் தகவல்கள் போதுமானவையலல எனின் **E** யையும்,

31. தயாவின் வயது எத்தனை ஆண்டுகளாகும்.
    X: அடுத்த வருடம் தயாவின் வயது அவரின் தாயாரின் வயதைவிட அரைவாசியாகும்.
    Y: இன்னும் ஐந்து வருடங்களில் அவரின் வயது ஒரு தசாப்தத்தின் முன்னர் இருந்த வயதைவிட இருமடங்கு ஆகும்.
    1)A 2)B 3)C 4)D 5)E

32. காட்ஸ் (cards) விளையாடுவதற்கு ஓர் வட்ட மேசையை சுற்றி ஐவர் அருகருகே அமர்ந்திருந்தனர். சரத்திற்கு அடுத்ததாக நிமலன் அமர்ந்திருக்கின்றானா?
    X: உபாலிக்கும் தனராஜ்ற்கும் அடுத்ததாக றஞ்சித் அமர்ந்திருக்கின்றான்.
    Y: தனராஜ்ற்கு அடுத்ததாக நிமலன் அமர்ந்திருக்கின்றான்.
    1)A 2)B 3)C 4)D 5)E

33. நந்தன், ரமணன் ஆகியோருக்கிடையே எவர் உயரமானவர்.
X: நந்தன் முகுந்தனைவிட உயரமானவர். ஞானத்தைவிடக் குட்டையானவர்.
Y: ரமணன் முகுந்தனைவிட உயரமானவர். ஆனால் ஞானத்தைவிடக் குட்டையானவர்
1)A 2)B 3)C 4)D 5)E

34. இன்று மாலாவின் வயது விமலாவின் வயதின் இரண்டு மடங்காகும். விமலா கலாவைவிட மூன்று ஆண்டுகள் இளையவர். இன்றைய திகதியிலிருந்து மாலா, விமலா, கலா ஆகிய அனைவரும் நான்கு ஆண்டுகள் உயிருடன் இருப்பார்கள் எனின், அன்றைய திகதியில் பின்வருவனவற்றில் எது உண்மையாக இருக்க வேண்டும்.
A - மாலாவின் வயது விமலாவின் வயதின் இரண்டு மடங்கு.
B - விமலா கலாவைவிட மூன்று ஆண்டுகள் இளையவர்.
C - மாலா கலாவைவிட மூத்தவர்.
1) A மாத்திரம் உண்மையானது 2) B மாத்திரம் உண்மையானது
3) C மாத்திரம் உண்மையானது 4) A,B ஆகியன மாத்திரம் உண்மையானவை
5) B,C ஆகியன மாத்திரம் உண்மையானவை

35. அருகே காட்டப்பட்டுள்ள உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன

1)16 2)14 3)12 4)11 5)10



36ஆம் 37ஆம் வினாக்களுக்கு பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விடை தருக. இந்த ஆங்கிலச் சொற்களின் எழுத்துக்களுக்கு எண் பெறுமானங்களை அளித்து அவற்றின் கூட்டுத்தொகையை எடுக்கும்போது ஒவ்வொரு சொல்லுக்கும் கிடைக்கும் பெறுமானங்கள் அதற்கு எதிரே தரப்பட்டுள்ளன.

**FOR = 42** **RACE = 81**
**AIR = 52** **FORCE = 88** **OFFICE = 118**

36. C,E ஆகியவறின் பெறுமானங்களின் கூட்டுத்தொகை யாது?

37. F இன் பெறுமானம் 21 ஆக இருக்கும்போது ACE யின் பெறுமானம் யாது?

38ஆம் 39ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள நான்கு உருக்களில் ஒன்று யாதாயினும் ஓர் காரணத்தின் விளைவாக ஏனைய உருக்களுடன் பொருந்தவில்லை. அப் பொருந்தாத உருவைக் கண்டுபிடித்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தருக.

38.



(1) (2) (3) (4)

39.



40. இடப்பக்கத்தில் ஓர் உரு காட்டப்பட்டுள்ளது. அதன் ஆடி விம்பத்தை வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள நான்கு உருக்களில் இருந்தும் தெரிந்தெடுத்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தைத் தருக.



1) 2) 3) 4)

41ஆம் 42ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஓர் நிகழ்ச்சியும் அது தொடர்பான **A,B,C,D,E** எனும் ஐந்து படிமுறைகளும் தரப்பட்டுள்ளன. இப்படிமுறைகள் திருத்தமான ஒழுங்கில் தரப்படவில்லை. இவற்றின் திருத்தமான ஒழுங்கைக் காட்டும் விடையை தெரிவு செய்க.

41. *நிகழ்ச்சி: அரசாங்க அலுவலகம் ஒன்றில் தொலைபேசி ஒலிக்கின்றது.*
A: பொதுமக்கள் தொடர்பு அலுவலர் தொலைபேசியை கையில் எடுக்கிறார்.
B: அழைப்பவரின் தேவையை பூர்த்திசெய்கிறார்.
C: உரிய அரச கருமத்திற்கு பொறுப்பான அலுவலரிடம் தொலைபேசியைக் கொடுக்கிறார்.
D: தம்மையும் நிறுவனத்தையும் அறிமுகம் செய்து அழைப்பவரிடம் யாரென விசாரிக்கின்றார்.
E: அழைப்பவரின் அரச கருமத் தேவை பற்றி விசாரிக்கின்றார்.
1)A,B,C,D,E 2)A,D,E,C,B 3)A,E,C,D,B 4) B,C,E,A,D

42. *நிகழ்ச்சி: சர்வதேச மகளிர்தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட உள்ளது.*
A: அதன் பின்னர் எவரும் அதைப் பற்றிப் பேசமாட்டார்கள்.
B: அந்தக் காலத்தில் வாழ்ந்த மகளிரைக் காட்டிலும் இந்தக்கால மகளிர் முன்னேறியுள்ளனர்.
C: பலர் மகளிர் உரிமைகள் பற்றி மகளிர் தினத்தில் மட்டும் பேசுகிறார்கள்.
D: எதிர்காலத்தில் மகளிரின் முன்னேற்றம் அளப்பரியதாக இருக்கும்.
E: எவரும் எவ்வாறாயினும் அவமதித்தாலும் மகளிர் நாட்டின் அபிவிருத்திக்கு ஆற்றிய சேவை அளப்பரியது.
1) ACBDE 2) ABCDE 3) BACDE 4) CAEBD

43. ஓர் தனியாள் செயற்திட்ட அறிக்கை தயாரித்தலில் உள்ளடக்கப்பட்ட பல முக்கிய படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இப் படிமுறைகளை ஒழுங்கான வரிசைக்கிரமப்படி தரும் விடையை தெரிவு செய்க.
A: தகவல்களைச் சேகரித்தல்
B: ஏனையவர்களின் கருத்துக்களை ஆலோசித்தல்
C: பொருத்தமான ஓர் பிரச்சனையை இனங்காணல்
D: தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்
E: நோக்கங்களைத் தீர்மானித்தல்
F: முடிவுகளை முன்வைத்தல்
G: முறையியலைத் தீர்மானித்தல்

1) ADFEBCG 2) GCADEFB 3) CBEGADF
4) BACEGDF 5) CAGDEFB

44. இவ்வினா மனித உணவின் அமைப்பைக் காட்டும் பின்வரும் வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். உடலில் நிறை 60 kg எனின் நீராகவோ, கொழுப்பாகவோ, புரதமாகவோ அமையாதிருக்கும் அளவு யாது?




1) 3 kg 2) 4 kg 3) 5.5 kg 4) 6 kg 5) எவையுமல்ல.

45. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் உள்ள புள்ளிகள் ஓர் தொடர்ச்சியான கோலத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. முதலில் உள்ள உருவுக்கு அடுத்து வரும் ஒவ்வொரு உருவும், முன்னுள்ள கோலத்திலுள்ள புள்ளிகளுக்கு மேலதிகமாக இன்னுமொரு புள்ளிகளின் வரிசையை சேர்ப்பதனால் உருவாக்கப்படுகிறது. இக்கோலத்தின் ஐந்தாவது உருவில் எத்தனை புள்ளிகள் காணப்படும்.



1) 15 2) 28 3) 26 4) 24 5) 22

46-50 வரையுள்ள வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. இதனைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.
விளையாட்டுப் போட்டி ஒன்றிலே நான்கு ஆட்டங்களில் பங்குபற்றிய ஐந்து விளையாட்டுக் கழகங்களின் ஆண் வீரர்களின் எண்ணிக்கை இங்கு தரப்பட்டுள்ளன.

| ஆட்டங்கள் | விளையாட்டுக் கழகங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E |
| சதுரங்கம் | 8 | 8 | 8 | 4 | 4 |
| பட்மின்ரன் | 8 | 12 | 8 | 12 | 12 |
| ரேபிள்ரெனிஸ் | 12 | 16 | 12 | 8 | 4 |
| கரம் | 8 | 4 | 8 | 4 | 8 |

☆ ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒவ்வொரு விளையாட்டுக் கழகத்திலிருந்தும் பங்குபற்றிய பெண் வீராங்கனைகளின் எண்ணிக்கை, அக்கழகத்தில் இருந்து பங்கு பற்றிய ஆண் வீரர்களின் எண்ணிக்கையின் 25% மாக இருந்தது.
☆ ஒவ்வொரு வீரரும் (ஆண், பெண்) ஓர் ஆட்டத்தில் மாத்திரம் பங்குபற்றினர்.

46. சதுரங்கத்திற்கும், கரத்திற்கும் சம எண்ணிக்கையான வீர, வீராங்கனைகளை அனுப்பிய இரு கழகங்களும் எவை?

47. பட்மின்ரனிலும், சதுரங்கத்திலும் பங்கு பற்றிய வீர, வீராங்கனைகளின் மொத்த எண்ணிக்கைக்கும் - ரேபிள் ரெனிசிலும், கரத்திலும் பங்குபற்றிய பெண் வீராங்கனைகளின் மொத்த எண்ணிக்கைக்கும் இடையான விகிதம் யாது?

48. விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய வீர, வீராங்கனைகளின் மொத்த எண்ணிக்கையில் அண்ணளவாக எச்சதவீதம் - C,D ஆகிய கழகங்களில் இருந்துவந்த வீர, வீராங்கனைகளின் எண்ணிக்கையாகும்.

49. சதுரங்கத்திலான பெண் இரட்டையர் நிகழ்ச்சியில் பங்குபற்றாத கழகங்கள் எவை?

50. உறுப்பினர்களில் 30% இற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றிய இரு ஆட்டங்களும் எவை?

51 தொடக்கம் 60 வரையான வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள வரைபடம் சம்பந்தமானவை. வினாவின் இலக்கத்தைக் கொண்ட கூட்டினுள் விடையை எழுதுக.

கீழ் தரப்பட்டுள்ள வரைபடத்தில் ஐந்து அறைகளைக் கொண்ட ஓர் அலுவலகத்தின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது. அறைகள் ஒவ்வொன்றும் சுவர்களினால் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அறையிலும் இரு மேசைகள் காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து அறைகளையும் பத்து மேசைகளையும் கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய திணைக்களத் தலைவர் பத்து அலுவலர்களிடையே ஒதுக்கீடு செய்ய வேண்டும். நீர் செய்ய வேண்டியது யாதெனில், ஒவ்வொரு மேசைக்குமுரிய அலுவலரை இனங்கண்டு அவ் அலுவலரைக் குறித்து நிற்கும் எழுத்தினை உரிய இலக்கத்தைக் கொண்ட கூடுகளில் (51 முதல் 60 வரை) எழுதுவதாகும்.




✳ ஓர் ஆணும் ஓர் பெண்ணும் ஒரே அறையில் இருக்க முடியாது.
✳ O, M, D, R, K, Y ஆகியோர் பெண் அலுவலர்கள்.
✳ S, G, L, F ஆகியோர் ஆண் அலுவலர்கள்.
✳ மூலையில் உள்ள அறையில் இருப்பதற்கு K விருப்பமுடையவராக இருக்கிறார்.
✳ Dக்கும் Yக்கும் தனி ஓர் அறை கொடுக்கப்படல் வேண்டும்.
✳ O அல்லது M உடன் ஓர் அறையை R பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை.
✳ Rற்கு ஒதுக்கப்படும் அறைக்கும் Yற்கு ஒதுக்கப்படும் அறைக்கும் அடுத்தாற்போல் உள்ள அறையில் G இருக்க வேண்டும்.
✳ Fக்கும் Sக்கும் பொதுமக்களுடன் அதிகவேலை இருக்கிறது. ஆகவே, பொதுமக்கள் எளிதில் வரக்கூடிய ஓர் அறை அவர்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.
✳ S, M, L, Y, K ஆகியோர் வலது பக்கத்தில் உள்ள மேசைகளை மட்டுமே விரும்புகின்றார்கள்.

# விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 16) | 3 | 31) | 2 | 46) | **A,C** |
| 2) | 3 | 17) | 4 | 32) | 1 | 47) | 5:1 |
| 3) | 3 | 18) | 2 | 33) | 5 | 48) | 38% |
| 4) | 4 | 19) | 3 | 34) | 5 | 49) | **D,E** |
| 5) | 1 | 20) | 1 | 35) | 2 | 50) | பட்மின்ரன், ரேபிள் ரெனிஸ் |
| 6) | **V** | 21) | 5 | 36) | 46 | 51) | **F** |
| 7) | **RQP** | 22) | 1 | 37) | 72 | 52) | **S** |
| 8) | 7 | 23) | 2 | 38) | 3 | 53) | **O** |
| 9) | 480 | 24) | 3 | 39) | 4 | 54) | **M** |
| 10) | 1/256 | 25) | 4 | 40) | 1 | 55) | **G** |
| 11) | 2 | 26) | 2 | 41) | 2 | 56) | **L** |
| 12) | 3 | 27) | 2 | 42) | 4 | 57) | **D** |
| 13) | 3 | 28) | 3 | 43) | 3 | 58) | **Y** |
| 14) | 1 | 29) | 1 | 44) | 1 | 59) | **R** |
| 15) | 2 | 30) | 3 | 45) | 1 | 60) | **K** |

தொகுப்பு
**பொன்னம்பலம் உமாசங்கர்**
B.Com (spl),Spl. Trd Com, C.B.F. (LON)
**பொது அறிவு - நுண்ணறிவு ஆசிரியர்.**

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.

-முதுமொழி

# நமது நோக்கு

## தேடலைத் தொலைக்கிறோம் !

அண்மையில் யாழ்ப்பாணக் கல்விச்சமூகத்தில் நடந்த நிகழ்வொன்று மனதை நெருடுவதாக அமைந்தது.

வட-கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் நூலக அபிவிருத்திப்பிரிவினால் யாழ். மாவட்டத்திலுள்ள 41 பாடசாலைகளுக்கெனக் கொண்டுவரப்பட்டிருந்த, தலா ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான நூற்தொகுதியைப் பெற்றுக் கொள்வதில் அதிபர்கள் காட்டிய அசிரத்தை பற்றி சம்பந்தப்பட்ட மாகாண உயரதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

நூற்தொகுதியைப் பெற்றுக் கொள்ளுமாறு பத்திரிகைச் செய்தி வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தும் குறிப்பிட்ட எண்ணிக்கையான பாடசாலை அதிபர்களே உடனடியாக, நேரடியாக வந்து அவற்றைப் பெற்றுக்கொண்டதாகவும் ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள் அவற்றைப் பெறுவதில் சிரத்தை காட்டவில்லையென்றும் அந்த அதிகாரி வேதனையுடன் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் நூலகங்களின் முக்கியத்துவம் பற்றியும் மாணவர்கள் நூல்களை தேடிக் கற்பதற்குரிய தேவை பற்றியும், அதனை ஊக்குவிப்பதற்குரிய வழிமுறைகள் தொடர்பாகவும் நிலவும் - அலட்சியப் போக்கினையே இந்தச் சம்பவம் காட்டுகின்றது என்றால் அது மிகையில்லை என்றே கூறலாம்.

யாழ. மாவட்டம் மட்டும் என்றல்ல, இன்று பரவலாக பாடசாலை மட்டங்களில் மாணவர்களிடையே வாசிப்பினைத் தூண்டக் கூடிய வகையில் வாய்ப்புக்களோ, ஊக்குவிப்புக்களோ மிகக் குறைந்து விட்டதென்றே சொல்லலாம்.

பெரும்பாலான பாடசாலைகளில், புத்தக அலுமாரிகளில் கண்ணாடிச்சட்டங்களுக்குப் பின்னால் 'காட்சிப்படுத்தப்படும' நூல்கள் எவையும் மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

ஒவ்வொரு வருடமும் நூலக வாரத்தில் மட்டும் இந்த நூலகள் மாணவர்களின் கரங்களுக்குச் செல்லும். வாசிப்பதற்கு என்றல்ல, அவற்றைத் தூசிதட்டி, துடைத்து மீண்டும் காட்சிப் பொருளாக்கும் சடங்கு நிகழ்வே அப்போது நடைபெறுகிறது.

பல பாடசாலைகளிலும் நூலகங்களுக்குரிய அடிப்படை வசதிகள் கூட இருப்பதில்லை. நூலகமொன்றை உருவாக்க வேண்டிய அவசியமும் உணரப்படுவதில்லை.

மாணவர்களுக்கான கற்பித்தல் என்பது, தனியே நான்கு சுவர்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுவிட்ட துயரமான நிலையில்-வாசிக்கவும், அதனூடாகத் 'தேடலை' மாணவர்களிடையே உருவாக்கவும் அதிபர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ 'நேரம்' இல்லாமல் போகின்றது.

ஒரு காலத்தில் - மாணவர்களுக்கென இருந்த 'நூலக நேரம்' இன்று காணாமற் போய்விட்டது. வகுப்பறைக் கற்பித்தல் அதனை ஆக்கிரமித்து விட்டது.

இவைபற்றியெல்லாம் கவலைப்படாத நிலையிலேயே - அதிபர்களும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் இருப்பதுதான் வேதனை தரக்கூடியதாகும்.

சர்வதேச தரத்திலுள்ள பல்கலைக்கழகங்களில், கல்வி நிறுவனங்களில் நூலகங்களுக்கு மாணவர்கள் செல்லவேண்டும் என்பது இன்று கட்டாயமாக்கப்பட்டு விட்டது. நூல்களைத் தேடிக்கற்க வேண்டியதன் அவசியம் அடிக்கடி எடுத்துரைக்கப்படுகின்றது. ஆய்வுகளுக்கும் திட்டப்பணிகளுக்கும் நூலகத்தின் துணையே அடிப்படையானது.

ஆனால் - எமது பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் நிலவும் நூலகப் புறக்கணிப்பு நிலையானது, மாணவர்களின் பரந்துபட்ட அறிவுக்கான ஆர்வத்தைத் தூண்டாமலேயே விட்டுவிடுவதோடு, உயர் கல்விக்கென வரும்போது ஒரு திண்டாட்ட நிலையையும் ஏற்படுத்தி விடுகின்றது.

தமிழ்ப்பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்களை நூலகங்களில் காண்பதே இப்போது மிக அரிதாகி வருகின்றது. பல்கலைக்கழக மட்டங்களில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு-பல மாணவர்களும், அந்த இறுதிக்கட்டத்திலேயே நூலகங்களுக்குள் நுழைய ஆரம்பிக்கின்றனர்.

இந்த துரதிஷ்டமான நிலைமை உருவாகுவதற்கு- பாடசாலை மட்டங்களில், நூலகங்களைப் பயன்படுத்துவது பற்றிய பரிச்சயம் ஏற்படுத்தப்படாததே முக்கிய காரணமாகும்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய கல்வித திட்டத்தில்- நூலகங்களின் அவசியம் பற்றி வலியுறுத்தப்படுவது ஓரளவு திருப்தி தரக்கூடிய தொடக்கமாக இப்போது இருந்தாலும்,

பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், கல்வி அதிகாரிகளும்- இந்த விடயத்தில் உடன் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர்.

பாடசாலைகளில் சிறியளவிலேனும் நூலகங்களை உருவாககுதல், மாணவர்களுக்கு அந்த நூல்களை வழங்கி வாசிப்புத் திறனை ஊக்குவித்தல், பாடசாலை நூலகத்திற்கென பொறுப்பாசிரியர்களை நியமித்தல், பாடசாலை நேரங்களிலேயே வாரத்திற்கு ஒரு முறையாவது நூலக நேரத்தை ஒதுக்குதல், பாடசாலை நேரம் தவிர்ந்த வேளையிலும் விடுமுறை தினங்களிலும் நூலக வசதிகளை மாணவர்களுக்கு அளித்தல், இதற்கான உதவிகளை பெற்றோர்கள், நலன் விரும்பிகளிடமிருந்து பெறுதல்- என இன்னோரன்ன பணிகளை இவர்கள் ஆற்ற முடியும். செய்வார்களா?

தென்னாசியாவிலேயே மிகப்பெரிய நூலகத்தை வைத்திருந்த பெருமைக்குரியவர்களான நாம்-இன்று பாடசாலை நூலகங்களைப் பொறுத்தளவிலேயே இவ்வளவுக்கு சிறுமைப்பட்டுப் போனதன் தாற்பரியத்தை உணரும் நாள் இனியாவது வரட்டும்!

# ரவூப் ஹக்கீமை பதவியிலிருந்து நீக்கிவிட்டு அதாவுல்லா அணிக்கு அமைச்சர் பதவி!

## ஜனாதிபதி சந்திரிகா தீவிர ஆலோசனை!

(கொழும்பு)

அமைச்சர் ஹக்கீமிடம் இருந்து அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்து - அவற்றை எதிரணியிலுள்ள மூவருக்கு வழங்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அமைச்சர் ஹக்கீமிடம் இருந்து அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்து, அதாவுல்லா அணியில் உள்ள மூவருக்கு வழங்குவது பற்றி ஜனாதிபதி சந்திரிகா தனது ஆலோசகர்களுடன் ஆராய்ந்து வருகின்றார்.

இதேவேளை - இன்று ஜனாதிபதி சந்திரிகாவை அதாவுல்லா அணியினர் சந்தித்துப் பேச்சு நடத்துவர் எனவும் தெரியவருகின்றது. இப்பேச்சுக்களின் பின்னர் ஹக்கீம் பதவி நீக்கம் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும்.

பெரும்பாலும் ஹக்கீமைப் பதவி நீக்குவது உறுதியாகி விட்டதாகவும், ஹக்கீமைப் பதவி நீக்கம் செய்வதன் மூலமே ஐ.தே.மு. அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த முடியும் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை - பிளவுபட்ட முஸ்லிம் காங்கிரஸ் அணியைச் சேர்ந்த அதாவுல்லா, சுபைதீன் ஆகியோர் ஹக்கீமைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என ஜனாதிபதியைக் கோரியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஹக்கீமுக்கு எதிரான அணியைச் சேர்ந்த மூவரை அமைசசராக்குவதன் மூலம் பிளவுபட்ட அணியினரைப் பலப்படுத்த முடியும் என ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

# ஈ.பி.டி.பியினர் கடத்தலுக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை!

## மட்டு.அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர்

(மட்டக்களப்பு)

ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் விஜி தங்கராஜா மற்றும் நிவாஸ் நேசராஜா, நவரட்ணம் ஆகியோர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மட்டு.அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் காணாமல் போனதற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை. புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் அமைதியைப் பேணுவதில் புலிகள் மிக உறுதியாக இருந்து வருகின்றனர்.

அமைதியைக் குலைக்க சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. அம்பாறையில் முஸ்லிம் இளைஞர் ஒருவரைக் கடத்தியதாகக் கூறப்பட்ட சம்பவமும் இது போன்றதே என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ராணுவ உயரதிகாரிகளின் சேவை நீடிப்பு ஜனாதிபதி – திலக் மாரப்பன முரண்பாடு

இராணுவ உயரதிகாரிகளின் பதவி உயர்வுகள், சேவை நீடிப்புகளைத் தீர்மானிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேஜர் ஜெனரல் மற்றும் பிரிகேடியர்கள் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள், சேவை நீடிப்புக்களை வழங்குவது தொடர்பாக ஒரு குழுவை நியமிப்பதென ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருந்தார்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சர் வர்த்தமானி மூலம்- 55 வயது வரை மேஜர் ஜெனரல்கள் பதவியில் இருக்க வகை செய்யும் பிரகடனத்தை வெளியிட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் இந்நடவடிக்கை ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

1977ஆம் ஆண்டிலிருந்து இராணுவ சேவையில் பதவி உயர்வுகள், நியமனங்கள், சேவை நீடிப்புக்கள் நீதியற்ற வகையில் இடம்பெற்றதாகக் கூறியே ஜனாதிபதி இதற்கெனக் குழுவொன்றை நியமிக்கத் தீர்மானித்திருந்தார்.

இந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சர் தன்னிச்சையாக வர்த்தமானிப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளதாகவும், இதில் மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளின் சேவை நீடிப்புக்கள் குறித்தே அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும், பிரிகேடியர் தர அதிகாரிகளின் சேவை நீடிப்புக் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் ஜனாதிபதி தரப்பில் இருந்து குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி - பிரதமர் சந்திப்பு அடுத்த வாரமளவில் நடக்கும்!

(கொழும்பு நிருபர்)

ஜப்பானில் இருந்து நாடு திரும்பிய பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனத்தெரியவருகின்றது. அடுத்தவாரத்தில் இந்தப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகாண்பது தொடர்பாக ஒஸ்லோவில் நடத்தப்பட்டுள்ள பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கம், அவசர சேவைகள் அமைச்சர் நியமனம் உள்ளிட்ட பல அரசியல் பிரச்சினைகளை ஆராயவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதேவேளை - அடுத்த பெப்ரவரி மாதத்தில் மேலும் பல பிரதி அமைச்சர்களை நியமிக்க ஐ.தே.க. அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் குறைத்துக் கொள்ளவே பிரதி அமைச்சர்களின் தொகையை ரணில் விக்கிரமசிங்க அதிகரிக்கத் திட்டமிடுவதாக் தெரியவருகின்றது.

# உள்ளகப் பதவியுயர்வுகள் ; மாநகரசபையில் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

மாநகர சபையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு உள்ளகப் பதவி உயர்வு வழங்குவது தொடர்பாக அண்மையில் நேர்முகத்தேர்வு நடைபெற்றது. இந்த நேர்முகத் தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கு அடுத்த வாரம் நியமனக் கடிதங்கள் வழங்குவது என யாழ்.இந்து விடுதியில் நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் நடைபெற்ற இம்மாதாந்தக் கூட்டத்தில், பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் பல பிரேரணைகளும் முன்மொழியப்பட்டன. இவ்வாறு முன்மொழியப்பட்ட பிரேரணை ஒன்றில், நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி.பியினருக்கு ஆதரவு தெரிவித்து பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது. அரசியல் சார்ந்த இப்பிரேரணையை யாழ். முதல்வர் நிராகரித்ததுடன், இது குறித்து அடுத்த கூட்டங்களில் நேரம் ஒதுக்குவதாகவும் தெரிவித்தார்.

தனியார் கட்டடமொன்றில் இயங்கிவரும் யாழ். மாநகர சபையின் முன்பள்ளி நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைக்க மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் தற்போது புனரமைக்கப்பட்டு வரும் யாழ். பொதுசன நூலகத்தை யாழ. மாநகரசபையிடம் கையளிக்கக் கோரி உரியவர்களிடம் கோரிக்கை விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தனியார் பல்கலைக்கழகங்கள் இலங்கையிலும் அமையவேண்டும்!

## என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வருடாந்தப் பட்டமளிப்பு விழாவின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஏராளமான மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு வெளிநாட்டுக்குச் செல்கிறார்கள். இதனால் வெளிநாட்டுச் செலாவணி வீண்விரயமாகிறது. இந்தியாவில் பல தனியார் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவை நல்ல முறையில் இயங்கி வருகின்றன. பல்கலைக்கழகச் சீர்திருத்தங்கள் எனது அரசாங்க காலததில் சிபார்சு செய்யப்பட்ட போதிலும், அவற்றை ஐ.தே. முன்னணி அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்றும் அவர் அப்போது மேலும் கூறினார்.

# சமஷ்டி மீதான தென்னிலங்கையின் உணர்வலை; கருத்து வெளியிடத் தடுமாறும் அரசியல் சக்திகள்!

**தெற்குத் திசையினிலே...**
**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

தமிழர்களுக்குத் தனிநாடு என்ற அம்சத்தை மட்டுமே பெரி தாகப் பேசிக்கொண்டிருந்த தென்னிலங்கை - இப்போது தமிழர்களுக்கு சமஷ்டி என்ற புதிய அம்சத்தை உள்வாங்கி அது தொடர்பாகத் தமது கருத்துக்களை மெதுவாக வெளியிடத் தொடங்கியுள்ளது.



ஒஸ்லோப் பேச்சுக்களின் முடிவில் அன்ரன் பாலசிங்கம், விதார் ஹெல்கிஸன், ஜீ.எல்.பீரிஸ்.

ஏற்கனவே, இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு என சொல்லப்பட்ட போதெல்லாம்- இந்த சமஷ்டி என்ற நிலைப்பாடும் எடுத்துரைக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த நிலைப்பாட்டைக் கருத்திற்கொண்டிருந்தனர். எனினும், கொழும்பின் அரசாங்கம் அதனை பொருட்படுத்தியிருக்கவில்லை. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணி 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொண்டுவரப்போவதாகக் கூறிய தீர்வுப் பொதியும் இந்த சமஷ்டியை மையமாக கொண்டிருந்ததாகவே சொல்லப்பட்டது. என்றாலும், அந்த தீர்வுப்பொதி வெளிவராமலேயே பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியும் முடிவுக்கு வந்தது. இவ்வாறான நிலையிலேயே- ஆளும் ஐககிய தேசிய முன்னணி, ஒஸ்லோவில் சமஷ்டி முறைக்குத் தமது இணக்கததை வெளியிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளும் அதற்கு இசைவை அறிவித்துள்ளனர். ஒட்டுமொத்தமாக, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்ப இணக்கம் ஒன்றை அதிகாரபூர்வமாக வெளியிட்டிருப்பது இதுவே முதறதடவையாகும்.

ஏற்கனவே, 1946ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு, கண்டி மற்றும் கரையோரப் பிரதேசங்களை மூன்று மாகாணங்களாக வெவ்வேறாக பிரித்து பிரதேச சுயாட்சிக்கான யோசனை ஒன்றை- எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தெரிவித்திருந்தார். பின்னர் 1956ஆம் ஆண்டு, பண்டா- செல்வா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1965 இல் டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட போதிலும், அதுவும் பயனற்றுப் போனது. இதன்பின்னர், 1978 இல் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மாவட்டசபைப் பரிந்துரையை முன்கொணர்ந்தார். எனினும், அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இறுதியாக, இனப்பிரச்சினை உச்சக்கட்டத்தைத் தொட்டபோது, அதே ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால், இந்திய அரசாங்கத்தின் அழுத்தத்துடன் செய்து கொள்ளப்பட்ட, ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் மாத்திரமே அமுலாக்கம் செய்யப்பட்டது.

எனினும், துரதிர்ஷ்டவசமாக வடக்கு - கிழக்கின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக செய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம், இன்று அந்த மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாத்திரமே அமுலாகிக் கொண்டிருக்கிறது. அதேநேரம், மாகாணசபைத் தீர்வை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என விடாப்பிடியாக இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி என்பனவும், இன்று மாகாணசபை ஆட்சி அதிகாரங்களில் இருப்பது தான் மற்றுமொரு புதுமை.

இந்த நேரத்தில் ஒன்று நினைவுபடுத்தப்பட வேண்டும். முன்னைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் ஜி.எஸ்.ரி. என்ற வரியை உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் அமுல் செய்யத் திட்டமிட்டிருந்தது. உலக வங்கியின் அதிகாரிகளும், அரசாங்க அதிகாரிகளும் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டிருந்த வேளையில், ஜி.எஸ்.ரி. வரியை உணவுப் பொருட்களிலும் விதித்தால் மக்களிடம் இருந்து பாரிய எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று, இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கு, உலக வங்கி அதிகாரிகள் கூறிய பதில் - உண்மையில் இலங்கை அதிகாரிகளை வெட்கப்பட வைத்ததோ என்னவோ திகைக்க வைத்தது. இலங்கை மக்கள் ஒரு விடயத்துக்கு குறிப்பிட்ட காலத்தில் மாத்திரமே எதிர்ப்பைக் காட்டுவர். பின்னர், அதனை அவர்கள் மறந்து விடுவர். எனவே, ஜி.எஸ்.ரி. அமுலாக்கலில் சிக்கல் எதுவும் இருக்காது என உலக வங்கி அதிகாரிகள் கூறினர். அதேபோல், ஜி.எஸ்.ரிக்கு இலங்கையில் குறிப்பிட்ட காலம் மாத்திரமே எதிர்ப்பு இருந்தது. பின்னர் ஜி.எஸ்.ரி. விதிக்கப்படாமல் இருக்கும் உணவுப் பொருட்கள் தரம் குறைந்தவை என்ற அளவிற்கு வந்துவிட்டதுதான் உண்மை. இந்த நிலைமைகள் மாகாணசபை ஆட்சி அமுலாக்கத்திலும் ஏற்பட்டது எனக் கூறலாம்.

மீண்டும் விடயத்துக்கு வருவோம்; ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும், அதாவது சம்பந்தப்பட்ட நாடுகளின் சொந்த நலன்களைக் கருத்திற்கொண்டே செய்யப்பட்டது. அது தமிழர்களின் அபிலாஷையைப் பூர்த்தியாக்கவில்லை எனக் கூறிய தமிழீழ விடுதலைப்புலிகள் ஆரம்பம் முதலே அந்த ஒப்பந்தம் செய்யப்படுவதை ஆட்சேபித்தனர். எனினும், இந்தியா அதனையும் பொருட்படுத்தாது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரை புதுடெலகிக்கு அழைத்து தங்க வைத்து விட்டு, இலங்கையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. இவ்வாறான அவசர ஒப்பந்தமே, இதுவரை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாரிய இடைவெளியைக் காட்டிக்கொண்டிருக்கிறது என்பது தெளிவு.

நோர்வேயில், இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சமஷ்டி இணக்கப்படி, இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு சுயநிர்ணயம் மற்றும் தாயகக் கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இதில், தாயகக் கோட்பாட்டை இலங்கை அரசாங்கம் தாம் ஏற்றுக கொண்டதாக நேரடியாகக் கூறாமல், தமிழர்களின் - பாரம்பரிய வரலாறு கொண்ட நிலம் எனக் குறிப பிட்டிருக்கிறது. ஒஸ்லோ இணக்கப்படி, தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ளார்ந்த சுயநிர்ணயத்துக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இது ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்திற்கும் உட்பட்ட விடயமாகும்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான "சமஷ்டி" ஏற்பாடு கனேடிய சட்ட வரைவுகளை கொண்டு, ஆரம்ப வடிவைப் பெற்றுள்ள போதிலும், ஏனைய சமஷ்டி நாடுகளின் அதிகாரப்பகிர்வுகளை ஆலோசித்து புதுவடிவமான சமஷ்டி ஆட்சி ஒன்றை நிறுவுவதற்கே; அதாவது, இலங்கைக்கு ஏற்புடைய சமஷ்டி ஆட்சி ஒன்றை அமைப்பதற்கே, கொள்கை இணக்கம் ஏற்பட்டுள்ளது. இது, தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் ஒரு வெற்றிப்படியே எனக் கூறலாம். மறுபுறத்தில், அரசாங்கத்துக்கு - தாம் ஒரு தீர்வுத் திட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளச் செய்து விட்டோம் என்ற திருப்தி ஏற்பட்டிருக்கிறது. இவை யாவும் ஒஸ்லோவில் நடந்து முடிந்தவை. இனி, தென்னிலங்கையில் இந்த சமஷ்டி தீர்வு ஆரம்ப யோசனை, என்ன தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது? ஏற்படுத்தப் போகிறது? என ஆராய்வது பொருத்தமாகும்.

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நோர்வே நாட்டின் உதவியுடனும், சர்வதேச நாடுகளின் ஆதரவுடனும் நிலைப்பாடு ஒன்றை முன்வைத்து விட்டது.




இனி, அதனை நடைமுறைப்படுத்துவதில்தான் அந்த முன்னணிக்குச் சவால்கள் முன் நிற்கின்றன. முதல் கட்டமாக ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி சமஷ்டி நிலைப்பாட்டை விமர்சித்திருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, சமஷ்டித் தீர்வு நிலைப்பாட்டின் மூலம் - அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் தனிநாடு ஒன்றுக்கான ஆரம்ப அடியை வைத்து விட்டதாக கூறியிருக்கிறார். (கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் நாட்டில் இரண்டு பிரதமர்கள் ஆட்சி செய்யப்போகிறார்கள் என இவர் கூறியிருந்தமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது) அத்துடன், இந்திய பாரதீய ஜனதாக்கட்சியும் சுயாட்சி முறையை எதிர்ப்பதாக அவர் கூறுகின்றார்.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள தீர்வு முனைப்புகளை இந்தியா ஆதரிப்பதாக, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானில் வைத்து தெரிவித்துள்ளார். ஆனால், இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுவிட்டு திரும்பியுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் அனுரா பண்டாரநாயக்க தலைமையிலான குழுவினர், மாற்றுக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அதாவது, இந்தியா- அந்த நாட்டில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கங்களுக்கு கூடுதலாக, இலங்கையின் வடக்கு-கிழக்குக்கு வழங்குவதை விரும்பவில்லை என்ற அர்த்தத்தில் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். ஜனாதிபதி, சமஷ்டித் தீர்வு தொடர் பில் நேரடிக் கருத்தை வெளியிடாத போதும், அடுத்த இரண்டு வருடங்கள் தீர்க்கமானவை என்றும், நாட்டில் இன வன்முறைகள் ஏற்படுத்த முனைவோரை அடக்க வேண்டியது அவசியம் எனவும் எச்சரித்துள்ளார். ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஒருவருடகால ஆட்சியதிகாரம் நிறைவடைந்துள்ள நிலையில், நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் கடந்த டிசம்பர் 5ஆம் திகதியுடன் ஜனாதிபதிக்கு கிடைத்திருக்கிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டில் தமிழீழம் உருவாவதைத் தீவிரமாக எதிர்த்து வந்த ஜனதா விமுக்தி பெரமுன எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உறுமய என்பவற்றுடன், முக்கியமான பௌத்தமதத் தலைவர்களின் சமஷ்டித் தீர்வு தொடர்பான கருத்துக்கள் தொடர்ந்தும் வெளிப்படுத்தப்படாதிருக்கின்றன. அதனைத் தென்னிலங்கையின் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில், வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம மககளுக்கும், மலையகத் தமிழ் மக்களுக்கும் தரப்படப் போகின்ற தீர்வுகள் எவ்வாறு அமையப் போகின்றன என்ற விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். முஸ்லிம்கள் விடயத்தில் உரிய அதிகாரங்களுக்கு வழி செய்யப்படும் என அன்ரன் பாலசிங்கம் கூறியிருப்பது, தற்சமயம் தலைமைத்துவம் தடுமாறி நிற்கும் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கு திருப்தியை அளித்திருப்பதாகவே தெரிகின்றது.

மலையக மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியம் என்ற அடிப்படையில், வடக்கு - கிழக்குக்கு தீர்வு வரும்போது, தமக்கும் தீர்வு கிடைக்கும் எனத் திடமாக அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். எது எப்படியிருப்பினும், சமஷ்டி நிர்வாகம் என்பதன் வடிவம் இலங்கையில உருவாக்கப்படுவதற்கு நீண்ட பயணம் ஒன்று எதிர் நிற்கிறது. அதேநேரம், சவால்களும் காத்திருக்கின்றன.

---

# வாழ்வின் விழுமியங்கள் மூலமே சமாதானத்தை அடைய முடியும்

**ஞாயிறு நற்சிந்தனை**
**வண.பிதா தோமஸ் ஜோர்ஜ்.**

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களுக்கும் வாழும் உரிமை இருக்கின்றது. அந்த உரிமை மறுக்கப்படுவதனாலதான் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன.

இந்த குழப்பங்கள் ஏற்படக் காரணமாக இருப்பது- ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளாததும் - நான் சொல்வதை அடுத்தவர் கேட்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுவதும் - மற்றவரில் இருக்கின்ற நேரான நடத்தையை நோக்காது, மறையான நடத்தையைப் பெரிதுபடுத்திப் பார்ப்பதும் - மற்றவரின் சிந்தனைகளை மதிக்காததும் - புரிந்துணர்வுத தன்மை இல்லாமையுமே ஆகும்.

இதனால்தான் குடும்பங்களிலும், அரசியலிலும், சமூக, சமய நிறுவனங்களிலும், உலக நாடுகளிலும் பல்வேறுபட்ட குழப்பங்கள்- அழிவுகள் - மனிதாபிமானமற்ற செயல்கள் ஏற்பட்டு, வன்முறைகளையும் - முரண்பாடுகளையும் உருவாகின்றன...

இன்று எமது நாட்டில் முன்னெடுத்துச் செல்லுகின்ற சமாதானம் முழுமையாக கிடைக்க வேண்டும் என்றால், எமது செயல்கள் ஒவ்வொன்றும் அதற்கு அர்த்தம் புகட்டுவதாக இருக்க வேண்டும்.

எமது உறவுகள் மத்தியில் இருகக்கின்ற சிறிய, சிறிய முரண்பாடுகளை இனங்கண்டு, அவை பெரியளவில் சென்றுவிடாதபடி, நன்கு அலசி ஆராய்ந்து ஆரம்பத்திலேயே அதனைக் கிள்ளி எறிந்துவிடவேண்டும்.

குறைகாணும் உலகில் நாம் நிறைவு கண்டு மகிழ்வோராகவும்- மற்றவரின் உயர்ச்சியில் தடை விதிக்காது உதவுவோராகவும் - மற்றவரை நல்வழிப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வோராயும் - ஒவ்வொரு உயிரும் இறை படைப்பு என்ற உயர் நோக்கோடு செயற்பட முன்வரவேண்டும்.

யூத சமூகம் சமாரியரைப் புறக்கணித்து ஒதுக்கி வைத்திருந்திருந்தது. இதனால் சமாரியரில் இருந்த நல்ல பண்புகளும் மறைக்கப்பட்டன. ஆனால், இயேசு அந்த குறைகாணும் சமூகத்தில் 'நல்ல சமாரியன்' உவமை மூலம் சமாரியனில் இருந்த நல்ல பண்புகளைச் சுட்டிக் காட்டினார்.

இயேசு வாழ்ந்த காலததை சற்று நோக்கிப் பார்ப்போமானால், அவர் புறக்கணிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, பாவிகளுக்காக - நோயாளிகளுக்காக - குரல் அற்றவர்களுக்காகக் குரல் கொடுத்தார் - வாழ்வளித்தார். இவ்வாறு நாம் பின்பற்றும கடவுள் எமக்கு முன்மாதிரியாய வாழந்து போக, அவ்ரைப் பின்பற்றும் நாம், கிறிஸ்தவர் என்ற ரீதியில் என்ன செய்கின்றோம்? கிறிஸ்தவ விழுமியங்கள் எம்மில் பிரதிபலிக்கின்றதா?

களியாட்டமும் - குடிவெறியும் - மற்றவரை ஏற்றுக்கொள்ளாமலும் - நல்ல உறவு வைத்திருக்காமலும், போட்டி பொறாமை கொண்டு அடுத்தவரின் வாழும் உரிமையை மறுப்பவர்களாகவும் - அடுத்தவரின் குறைகளை நியாயப்படுத்தியும், நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்வதில் என்ன பயன்!

எமக்கு எவ்வளவு உரிமை இருக்கின்றது என்று நினைக்கின்றோமோ, அத்தனை உரிமையும் அடுத்தவனுக்கும் இருக்கின்றது என்று நாம் எல்லாரும் நினைப்போமானால், அப்போதுதான், சமாதானம் பூரணமாக எமக்குக் கிடைக்கும்.

எமது வாழ்வின் மூலம்தான் சமாதானத்தைப் பெறமுடியும். கிறிஸ்தவ விழுமியங்கள் எம்மில் பிரதிபலிக்கின்றபோதுதான் சமாதானத்தை அனுபவிக்க முடியும்.

*"உன்னதத்தில் கடவுளுக்கு*
*மாட்சி உரித்தாகுக!*
*உலகில் அவருக்கு உகந்தோருக்கு*
*அமைதி உண்டாகுக!"*
*(லூக் 2:13-14)*

---

## தென்மராட்சி பாடசாலைகளுக்கு நூல்கள்

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலுள்ள பொது நூல் நிலையங்களுக்கு, வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள நூலக அபிவிருத்திப் பிரிவினரால் வலய அலுவலகத்துக்கு நூல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே, இப்பாடசாலைகளினது அதிபர்கள் நாளை பாடசாலை இறப்பர் முத்திரையுடனும் பொருட்கள் பதிவேட்டுடனும் வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (34)

## விசேட ஆராதனை

சேர்.பொன்.இராமநாதனின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு நாளை காலை 9 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள அன்னாரது சமாதிக் கோவிலில் விசேட அபிடேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. (83)

## சின்னஞ் சிறு செய்திகள்

### மரக்கறிகள் விலை உயர்வு

(வலி.வடக்கு)

மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளில் காய்கறிகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இச்சந்தைகளுக்கு காய்கறிகள் குறைவாகவே வருவதுடன் விலைகளும் 50 ரூபா, 60 ரூபாவுக்கு மேல் விற்கப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மாரிகாலத்தில் இவ்வாறு காய்கறி விலைகள் அதிகரிப்பது இயற்கையே என வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.(105)

### தெல்லிப்பளைப் பிரதேசத்தில் நான்கு முன்பள்ளிகள்

(வலி.வடக்கு)

ஏழைச்சிறார்களின் கல்வி விருத்தியை நோக்கமாகக் கொண்டு தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் 4 முன்பள்ளிகளை ஆரம்பித்துள்ளது.

தெல்லிப்பளை அம்பட்டாவத்தை, போயிட்டி, சித்தியம் புளியடி, திருவள்ளுவர் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் இந்த முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.(105)

## யாழ்.போதனா வைத்தியசாலை

# பிரேத அறைக் கட்டடவேலை திடீரென இடைநிறுத்தப்பட்டது

## புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் 1 கோடி ரூபா செலவில் அமைக்கப்படவிருந்த பிரேத அறையின் நிர்மாணப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இப்பணிகள் இடைநிறுத்தப்பட்டது தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சு ஆராய்ந்து வருகிறது. யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த வருடம் இக்கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதற்கான முழுமையான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், இக்கட்டடப்பணிகள் முழுமையடைய முன்னரே இடைநிறுத்தப்படடுள்ளது. இக்கட்டடம் இடைநிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் என்ன என்பது பற்றியும் இன்றைய நிலையில் இக் கட்டடம் அவசியமானதா என்பது பற்றியும் தற்போது ஆராயப்பட்டுவருகிறது.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்கென, புனர்வாழ்வு அமைச்சின செயலாளர் தலைமையிலான குழுவொன்று, நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தது. இக்குழுவினர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேரடியாக விஜயம் செய்தனர். அரைகுறை நிலையிலுள்ள மேற்படி கட்டடத்தை பார்வையிட்டனர். அத்துடன் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சதுர்முகத்துடனும் கலந்துரையாடல் நடத்தினர்.

எதிர்காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்கெனத் தயாரிக்கப்பட்டிருக்கும் பாரிய செயற்திட்டத்தின்படி- இப்பிரேத அறையின் அமைவிடம் பொருத்தமற்றதாகும் என்றும் இவ்வமைவிடத்திற்கு அருகாமையில் வைத்திய சாலையின் சமையல் அறைப்பகுதி காணப்படுவதாகவும், அதேவேளை நகரின் பிரதான வீதிகளில் ஒன்றாகிய- விக்ரோறியா வீதி மற்றும் மணிக்கூட்டுக்கோபுர வீதி காணப்படுவதாகவும், எனவே- இவ் அமைவிடத்தில் மாற்றம் செய்ய வேண்டும் எனவும் வைத்திய சாலைப்பணிப்பாளர்- மேற்படி புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

(க,லி)

## கல்வி நிர்வாக சேவை வெற்றிடம் வட - கிழக்கில் 319 பேர் தேவை

வடக்கு கிழக்கில் கல்வி நிர்வாக சேவையில் 319 வெற்றிடங்கள் உள்ளன.

வெற்றிடங்கள் நிரப்புவதற்கு 419 பேர் தேவையாக உள்ள போதிலும், தற்போது கடமையில் 130 பேர் மாத்திரமே கடமை புரிகின்றனர்.

இந்த வெற்றிடங்களை பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களுமே பூர்த்தி செய்து வந்தனர். இவர்கள் பற்றிய விபரங்களை மாகாண கல்வித் திணைக்களம் கோரியிருந்தும், இவர்களை நிரந்தரமாக்குவதற்குரிய சுற்று நிருபம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இது பற்றி தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் முறையிட்டும், எந்தவித பலனும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### அகில இலங்கை தமிழ் மொழித்தின விழா

அகில இலங்கை தமிழ் மொழித்தின விழா 17ஆம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரணிமல ராஜபக்ஸ கலந்து கொள்ளவுள்ளார். இவ்விழாவில், தேசிய மட்டத் தமிழ்மொழித் தினப் போட்டிகளில்- முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து பதக்கங்களைப் பெறும் மாணவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வித்திணைக்கள உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

### உலக வங்கியிடம் கடன்பெற அனுமதி

உலக வங்கியிடமிருந்து 1440 மில்லியன் ரூபா கடனாகப் பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்கத்தின் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கே இக்கடன் பெற வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### இத்தாலிக்கு செல்லமுயன்ற 22 பேர் கைது

(கொழும்பு)

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்லமுயன்ற 22 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த 22 பேரில் 2 பேர் இப்பயணத்தை ஏற்பாடு செய்தார்கள் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 18 பேர் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழர்களாவர்.

# போர்க் கைதிகளாக விடுவிக்கப்பட்ட படையினருக்கு சலுகைகளில்லை

விடுதலைப்புலிகள் இயக்கத்தால் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்ட கப்டன் போயாகொட மற்றும் ஏழு படையினருக்கு இதுவரை பதவியுயர்வுகளோ, சம்பள நிலுவைகளோ வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஓமந்தையில் வைத்து இவர்கள் விடுவிக்கப்பட்டபோது இவர்களைக் கையேற்ற இராணுவ அதிகாரிகள், இவர்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இது வரை நிறைவேற்றி வைக்கவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட காலப்பகுதியில், இவர்களுக்குக் கீழே கடமை புரிந்த அதிகாரிகள், இவர்களுக்கு மேல் பதவியுயர்வு பெற்று இருக்கிறார்கள் என்றும்-

அரசாங்கம் இவர்களின் இந்தக் கோரிக்கை பற்றிப் பரிசீலனை செய்யுமா? எனவும் 'திவயன' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு 2003ஆம் ஆண்டுக்கு- ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள், போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை ஆகியவற்றின் மூலம் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் என்.வரதராஜா அறிவித்துள்ளார்.

## சமஷ்டி உடன்பாடு நாட்டுக்குப் பேறாகும்

### விக்கிரமபாகு கருணாரட்ன

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையை ஏற்படுத்துவதற்கான உடன்பாடு எட்டப்பட்டிருப்பது இந்த நாட்டுக்குக் கிடைத்த பெரும் பேறாகும் என்று புதிய இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

இத்தகைய ஆட்சிமுறை ஒன்றை ஜனாதிபதி 1995ம் ஆண்டிலேயே ஏற்றுக் கொண்டதால்- தற்போது அரசாங்கமும், ஜனாதிபதியும் இது சம்பந்தமாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முடியும் என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளின் மத்தியஸ்தம் இன்றியே, இத்தகைய அமைப்பு முறை ஒன்றுக்கு இரு தரப்பினரும் ஏற்கனவே இணங்கியிருக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளை முறியடிப்பதற்குப் பிற்போக்குச் சக்திகள் மேற்கொள்ளும் முயற்சிகளை அரசாங்கமும் ஜனாதிபதியும் தோல்வி அடையச் செய்ய வேண்டும் என்றும கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# தொழிற்சங்கங்களின் கூட்டு ஜனாதிபதியைச் சந்திக்கும்

## சம்பள உயர்வை நடைமுறைப்படுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க மற்றும் தனியார் ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவைச் சந்திக்கவுள்ளது.

திஸ்ஸ தேவேந்திரவின் சம்பள ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாவிடில்,

அரசாங்க ஊழியர்களுக்கு 4000 ரூபாவும், தனியார் ஊழியர்களுக்கு 1000ரூபாவும் சம்பள உயர்வு பெறுவது சம்பந்தமாக ஜனாதிபதியோடு கலந்துரையாடுவதற்கு இத்தொழிற்சங்கக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

தங்கள் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்காது போனால், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக தொழிற்சங்கப்பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வீட்டுக் கதவுகளை கழற்றிய சிப்பாய் கைது

### யாழ்ப்பாணத்தில் பணி புரிந்தவராம்

இராணுவ சிப்பாய் ஒருவர் பழைய வீடொன்றிலிருந்து கழற்றப்பட்ட ஏழு கதவுகளை திருடிக்கொண்டு சென்றபோது கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் வியாங்கொட பொலிஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்த இராணுவச்சிப்பாய் யாழ்ப்பாணத்தில் சிங்க ரெஜிமென்டில் பணிபுரிபவர் என்றும் லீவில் ஊருக்குப் போனபோதே இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.கதவுகள் கழற்றப்பட்ட வீடு ஒரு அரசாங்க ஊழியருடையது. அவர் கொழும்பில் தற்காலிகமாக வசித்து வருபவர். இதனால் வீடு மூடப்பட்டுக்கிடந்தது. அந்த வீட்டிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

## இன்றைய நாள் இனிய நாள்

### 08-12-2002 - ஞாயிற்றுக்கிழமை

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மீ, - 21ஆம் திகதி**

*திதி* :- பூர்வபட்ச சதுர்த்தி அதன் மேல் பஞ்சமி

*நட்சத்திரம்* :- உத்தராடம் - மு.பகல் - 10.02 வரை அதன் மேல் திருவோணம்

*ராகுகாலம்* :- 4.47 - 6.17

*சுபநேரம்* :- 9.17 - 10.47

**மேடம்** :- தேகசுகம் நன்று, தெய்வசேவையில் புகழ், அறிஞர் உறவு, வெளியூர் பயணம், கல்வி முன்னேற்றம்.

**இடபம்** :- தேகசுகம் நன்று, பிதா மகிழ்ச்சி, தெய்வசேவையில் புகழ், மதகுரு ஆசி, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**மிதுனம்** :- தேகசுகக் குறைவு, பிரயாணத்தடை, புதிய காரியங்களில் ஈடுபடுதல் தவிர்க்கவும், காரிய தாமதம், கல்வி முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, தெய்வதரிசன பலன், சமய அறிஞர் தரிசனம், ஆசீர்வாதம், கல்வி முன்னேற்றம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, பழைய கடன் வசூல், எதிரி தனிமையில் ஆழ்ந்த சிந்தனை, நோய் நீக்கம், கல்வி முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகம் நன்று, புத்திரர் மகிழ்ச்சி, தெய்வதரிசனம், மதகுரு ஆசீர்வாதம், புகழ், கல்வியில் ஊக்கம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- மாதா தேகசுகக் குறைவு, வீட்டில் செலவு, வாகனச் செலவு, உறவினர் கவலை, கல்வி முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, மனதில் உற்சாகம், புதிய தொழில் முயற்சி, நண்பர்கள் உறவு, கல்வி முன்னேற்றம்.

**தனு** :- எவ்வளவு பணவரவு இருந்தாலும் பணம் மிஞ்சாது, பெண்களால் சண்டை, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம்.

**மகரம்** :- மனமகிழ்ச்சி, பணவரவு, தெய்வதரிசனம், சமய அறிஞர் உறவு, விருந்தினர் உறவு, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**கும்பம்** :- தேகசுகக்குறைவு, காரியத்தடை, தேவையற்ற செலவு, அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும், கல்வி முன்னேற்றம்.

**மீனம்** :- விருந்தினர் வரவு, மனமகிழ்ச்சி, பெண்கள் மகிழ்ச்சி, தெய்வசேவை, சமய அறிஞர் தரிசனம், கல்வி முன்னேற்றம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரச ஊழியருக்கான நட்டஈடு செயலகத்தில் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வன்செயல் காரணமாக பாதிப் படைந்த அரச ஊழியர்களிற்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் யாழ் மாவட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

நேற்றைய தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் போது சுமார் 42 அரச ஊழியர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகைக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.ஜெயரட்ணம், மேலதிக செயலாளர் ரி.குமாரதாசன், நிதிப்பணிப்பாளர் இ.அன்னலிங்கம், உதவி முகாமையாளர் எஸ்.பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை- 1500 ரூபாவிற்கு உட்பட்ட வருமானம் உடையவர்களுககான நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்காக, 20 இலட்சம் ரூபா யாழ். செயலகத்திற்கு வழங்கப்பட்டது. இவ்வாறு பாதிப்படைந்த ஏனையவர்களுக்கும் படிப்படியாக நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லி)

## புனர்வாழ்வு அமைச்சுக்குழு கிளிநொச்சிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.ஜெயரட்ணம், மேலதிக செயலாளர் ரி.குமாரதாசன், நிதிப்பணிப்பாளர் இ.அன்னலிங்கம், உதவி முகாமையாளர் எஸ்.பாலச்சந்திரன் ஆகியோர் அடங்கிய குழுவினரே கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளனர்.

நேற்றுமாலை கிளிநொச்சிக்குச் சென்றடைந்த இக்குழுவினர் கிளிநொச்சி அரசாங்க அதிபர் உட்பட உயரதிகாரிகள் பலரைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடாத்தவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதும் மற்றும் எதிர் காலத்தில் மேற்கொள்ளப் படவிருக்கும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்தும் இக்குழுவினர் நிலைமைகளை ஆராயவுள்ளனர். (க)

## கூட்டுறவு ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்த தேசியக்கூட்டுறவுச்சபைத் தலைவர் லயன்ஸ் சமரசிங்க மேற்படி தகவலை வெளியிட்டார். இத்திட்டத்தை நாடு முழுவதற்கும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தாம் பேச்சு நடாத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். இவ்விடயம் குறித்து சாதகமான முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க,லி)

## பேராதனை பல்கலைக்கழக மாணவர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளனர். விவசாய பீட மாணவர்களான இவர்கள் இன்று நயினாதீவுக்கு விஜயம் செய்யவுள்ளனர். இவர்களுக்கு நேற்று இராப்போசன விருந்துபசாரம் ஒனறை விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டச் செயலகம் வழங்கியது.

## சமஷ்டிமுறைத் தீர்வு குறித்து பொ.ஐ.மு.க்குள் கருத்து முரண்

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடந்த சமாதானப் பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கததின்படியான சமஷ்டி முறையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் வேறுபட்ட கருத்துகள் தோன்றியுள்ளன.

சமஷ்டித் தீர்வு குறித்து கருத்து வெளியிட்டுள்ள பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம-

சமஷ்டி முறையிலான தீர்வு குறித்து தமது கட்சி முன்னரே சில திட்டங்களை முன்வைத்திருந்ததாகவும், 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் யாப்பில் இது பிரேரிக்கப்பட்டிருந்ததென்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இது குறித்து தெரிவித்துள்ள நிமால் சிறிபால டி சில்வா-

சமஷ்டி எப்படி இருக்கும் என்று முன்னரே தீர்மானித்து விட்டார்கள். இப்போது அவர்கள் வார்த்தைகளால் விளையாடுகிறார்கள். இது ஏற்கத்தக்க தீர்வல்லவென்றும் தெரிவித்துள்ளர்.

இது போல பொ.ஐ.முன்னணிக்குள்ளும் பல்வேறு கருத்துகள் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

## சமஷ்டி தீர்வுத்திட்டம் குறித்து ஜனாதிபதி தீவிர பரிசீலனை

(கொழும்பு)

ஒஸ்லோவில் அரசுக்கும்- புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட சமஷ்டித் தீர்வு குறித்து ஜனாதிபதி சந்திரிகா தீவிரமாக ஆராய்ந்து வருகிறார் என மங்கள சமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஒற்றையாட்சித் தீர்வு அமுலாக்கலையே விரும்பினார். எனினும், சமஷ்டி அமைப்பு இனப்பிரச்சனைக்கான தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து எவரும் ஜனாதிபதிக்கு நேரடியாகச் சென்று விளக்கமளிக்கவில்லை. எனினும் இத்தீர்வுத் திட்டம் குறித்து ஜனாதிபதி தீவிரமாக ஆராய்ந்த பின்பே தனது கருத்தை வெளியிடுவார் என மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - ஜப்பானிலிருந்து நாடு திரும்பிய பிரதமர் ரணில், அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்து ஒஸ்லோ பேச்சு விபரங்களை அவரிடம் எடுத்து விளக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

## தமிழ் கூட்டமைப்புக்குழு இந்தியா செல்கின்றது !

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழு இந்தியா செல்லவுள்ளது. அங்கு இந்தியத்தலைவர்களை சந்தித்து தற்போதைய இலங்கை அரசியல் நிலவரம் மற்றும் ஒஸ்லோ பேச்சு விபரங்கள் என்பவற்றை அவர்களுக்கு இக் குழு விளக்கவுள்ளது.

நாளை திங்கள் நடைபெறவுள்ள கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் இந்திய விஜயம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

முன்னதாக கூட்டமைப்புக் குழுவினர்- இந்தியப் பிரதமர் வாஜ்பாயை சந்திக்க அனுமதி கேட்ட போதும் அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், மீண்டும் வாஜ்பாயை சந்திக்க முயற்சிப்பது என்றும், அது முடியாவிட்டால் அமைச்சர்களைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலவரங்களை அவர்களுக்கு விளக்குவது என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ்மக்களின் ஆதரவை நாடும் ரவூப் ஹக்கீம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலவீனப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் சதி முயற்சிகளை முறியடிப்பதற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமிழ் மக்களின் ஆதரவை நாடியுள்ளார்.

வங்குரோத்து நிலையை அடைந்த அரசியல்வாதிகளால் இந்த சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் கூறினார்.

மூதூருக்கு, அமைச்சர் ரவூப் ஹக்கீம் விஜயம் மேற்கொண்ட போதே அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

தமக்கு எதிரான சதி முயற்சியை முறியடிப்பதற்கு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக, வடக்குக் கிழக்குப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்ய இருப்பதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் பூரணமாக நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ"க்குத் தலைமை தாங்கும் தனது பொறுப்பு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் உரிமைகளும், சலுகைகளும் முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### தேவாலயத்தினுள்....

கடறபடைச் சிப்பாய் தேவாலயத்தின் கதவினைப் பூட்ட எத்தனித்துள்ளார். இவ்வேளை, அப்பெண் கூக்குரல் இடவே மக்கள் தேவாலயத்தினைச் சூழ்ந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து கடற்படைச் சிப்பாய் அங்கிருந்து தப்பிவிட்டார்.

மேற்படி சம்பவத்தினால், பொலிசாரிடம் முறையிட மக்கள் சென்றபோது முறைப்பாட்டினை பொலிசார் ஏற்க பின்னின்றனர். இதனால் வாக்குவாதம் பலக்கவே முறைப்பாட்டினை சிங்களத்தில் பதிய முயன்றனர். அதற்கும் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவே பின்னர் தமிழில் முறைப்பாட்டினைப் பதிந்துள்ளனர்.

பொலிசாரிடம் முறைப்பாட்டினைப் பதிந்ததன் பின்னர் பொலிஸ் நிலையத்தினை விட்டு வெளியே வந்த போது ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் மக்களை மிரட்டியதாகவும் தெரியவருகின்றது. (113)

## அதாவுல்லா குழுவினர் நிந்தாவூரில் கூட்டம்

நிந்தவூரில் நேற்று முஸ்லிம் காங்கிரசை சேர்ந்த எதிரணிக் குழுவினரின் ஆதரவுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதாவுல்லா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களான சுபைதீன், ஹவ்ரத், அஸீஸ் ஆகியோரும் பங்குபற்றினர்.

பெருமளவு முஸ்லிம் மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னதாக இக்கூட்டத்திற்கு பிரசாரம் செய்வதற்காக சென்ற பிக்கப் வாகனமொன்று இன்னுமோர் குழுவால் அடித்து நொருக்கப்பட்டது.

அதாவுல்லா குழுவினர் தமது நிலைப்பாட்டை விளக்கி மக்கள் முன்செல்ல முடியுமா என அமைச்சர் ரவூப் ஹக்கீம் விடுத்த சவாலையடுத்தே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாக அதாவுல்லா ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

### தமிழருக்கு உரிமைகள்...

நோர்வேயில் நடைபெற்றுவரும் மாவீரர் தின சிறப்பு நிகழ்ச்சியில் இன்று அதிகாலை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த சிறப்பு நிகழ்ச்சியில் முனனதாக கேணல் கருணா உரையாற்றினார். கலாநிதி பாலசிங்கத்தின் பேச்சைத் தொடர்ந்து அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உரையாற்றவிருந்தார்.

கலாநிதி பாலசிங்கம் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,உலக சட்டங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐ.நா.சாசனத்தின் படியே தமிழர்களுக்கான சுயாட்சி உரிமையை நாம் கேட்கின்றோம். எமக்கான சுயாட்சி உரிமையைப் பெறுவதற்காக உலகிலுள்ள இருபதிற்கும் மேலான நாடுகளில் உள்ள சமஷ்டி ஆட்சி முறையே நாங்கள் பரிசீலிக்கவிருக்கிறோம். எம்மைத் தடைசெய்த நாடுகளெல்லாம் இன்று தங்கள் கதவுகளை எமக்காகத் திறந்து விடுகின்றன என்று பாலசிங்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எனக்குச் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை நோர்வேயில் செய்யப்பட்டபோது ஒரு போராளி தனது சிறுநீரகத்தை எனக்குத் தானமாக வழங்கினார்.

ஆனால், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு இதே போன்ற சிறுநீரக அறுவைச்சிகிச்சை இந்தியாவில் நடைபெற்றது. அவருக்கு ஒரு பௌத்த பிக்குவே மாற்றுச் சிறுநீரகத்தை வழங்கினார்.

கதிர்காமரது உடலில் ஓடும் இரத்தம் இந்த வகையில் சிங்கள இரத்தமே. அதனால்தான் அவர் உலக நாடுகளெங்கும் பிரசாரம் செய்து விடுதலைப்புலிகள் மீது தடையை விதிக்கச் செய்தார். ஆனால், எனது உடலில் ஓடுவதோ ஒரு போராளியின் இரத்தம். எனவே, இன்று கதிர்காமர் தடை விதிக்கச் செய்த நாடுகள் எல்லாம் எம்மை வரவேற்குமாறு நாங்கள் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

கதிர்காமர் எம்மிடம் தோற்றுப் போய்விட்டார் என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

இச்செய்தி அச்சுக்குப் போகும் போதும் அவரது உரை தொடர்ந்த வண்ணம் இருந்தது.

**எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான கைநூல்**

தொகுப்பு. த. தவசேகர்

**இம்முறை நடைபெறும் முக்கிய மாற்றங்களை உள்ளடக்கியது.**

**யாழ். பிரதான புத்தக நிலையங்களிலும், ஆசிரியரின் வகுப்புக்கள் நடைபெறும் இடங்களிலும் திங்கள் முதல் கிடைக்கும்.** (சி-288)

## சமாதானப் பேச்சு குறித்து அமைச்சர் பீரிஸ் லண்டனுக்கு

(லண்டன்)

அரசியலமைப்பு விவகார அமைசசர் ஜி.எல்.பீரிஸ் சமாதானப் பேச்சுக்கள் பற்றிய முக்கிய கலந்துரையாடல் ஒன்றுக்காக லண்டன் செல்லவுள்ளார்.

வரும் 17 ம்திகதி லண்டன் செல்லும் இவர், பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சின் செயலாளர் ஜக்ஸ்ரோ மற்றும் அயர்லாந்து பிரதம மந்திரி பேர்ட்டி அகேர்ன் ஆகியோரையும் சந்தித்து பேசவுள்ளார்.

லண்டனுக்குச் செல்லும் அமைச்சர் பீரிஸ் அப்பயணத்தினைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கும் பயணம் செய்வார் என்றும், அங்குள்ள அரசியல் அமைப்பின் மாதிரிகளை அவர் ஆராய்வார் எனவும், கொழும்பில் உள்ள வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

### சமஷ்டி...

மத்தியஸ்தத்தினால் பெறப்படும் முயற்சிகள் வலுவற்றவை எனக் கருதுவதாகத் தெரியவருகிறது

எனினும், இலங்கையின் சமாதான முயற்சிகளைப் பொறுத்து , முக்கியத்துவம் மிக்கது என ஒஸ்லோ விடுத்துள்ள அறிக்கையை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும்,

அதேவேளை -

இந்த விடயங்கள் குறித்து , உத்தியோகபூர்வ அறிக்கைகள் எதனையும் இப்போதைக்கு வெளியிடுவது இல்லை என இந்தியா தீர்மானித்திருப்பதாகவும் - புதுடெல்கியில் உள்ள வெளியுறவு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள-நமது ஈழநாடு அச்சகத்தில் 08.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.